# யாழ் அமுது

யாழ்ற்ரன் கல்லூரி

தர்மம் வெல்லும்

CARLTON COLLEGE LIBRARY KARAINAGAR

CARLTON COLLEGE LIBRARY KARAINAGAR

## யாழ்ற்ரன் கல்லூரி
## காரைநகர்.

உ

யா/யாழ்ற்றன் கல்லூரி
காரைநகர்

தர்மம் வெல்லும்





# எங்கள் அதிபரின் ஆசியுரை

தரம் 9 மாணவர்களின் ஆக்கத் திறனாக வெளி வரும் "**யாழ் அமுது**" சஞ்சிகைக்கு ஆசியுரை வழங்குவதில் பெரு மகிழ்வடைகின்றேன். மாணவர்களின் மொழி ஆக்கத்திறன் விருத்தியையும் சிந்தனைக் கிளறல்களையும் மேம்படுத்தும் முகமாக சஞ்சிகை ஆக்கம் வெளிக் கொணரப்படுகின்றது. இவ்வாக்கம் இவ்வருட கன்னி முயற்சி. எனினும் எதிர் காலத்தில் சிறந்த முறையில் வளம் பெற அமைய வேண்டுமென வேண்டி ஆசியுரை வழங்கி நிற்கின்றேன்.

**திரு..ந.பரமசிவம்**
**அதிபர்.**
**யா/ யாழ்ற்ரன் கல்லூரி.**
**காரைநகர்.**

YARLTON COLLEGE
LIBRARY
KARAINAGAR

# முகவுரை.

யா/யாழ்ற்ரன் கல்லூரி காரைநகர் தரம் 9 மாணவர்களாகிய நாம் "**யாழ் அமுது**" என்னும் சஞ்சிகையை எமது கன்னி முயற்சியாக உருவாக்கியுள்ளோம். இச் சஞ்சிகையில் எமது ஆளுமை வளர்ச்சிக்கு உறுதுணையாகவும், அறிவுத்திறன் விருத்தியாகவும் பல கட்டுரைகள், கவிதைகள், பழமொழிகள், விடுகதைகள் என்பன இடம் பெற்றிருக்கின்றன.

இச் சஞ்சிகையை ஆக்கவதற்கு எமக்குப் பல வழிகளிலும் ஊக்கமும் உற்சாகமும் அளித்த எமது அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய கல்லூரி அதிபர் அவர்கட்கும் எமக்கு வழிகாட்டலையும் ஆலோசனையையும் வழங்கிய திருமதி.ஜெனிற்ரா ஆனந்தராஜா ஆசிரியர் அவர்கட்கும் இதனை கணனியில் அச்சுப் பதிப்பதற்கு உதவிய ஆசிரியர்கள் N.குணேந்திரராஜா, P.சதீஸ்கரன் அவர்களுக்கும், கணனியில் வடிவமைப்புச் செய்து தந்த ஆசிரியர் N.வில்லியம் சாந்தகுமார் அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**மாணவர்கள்.**
**தரம் 9A, B**

# முகவுரை.

[illegible]

[illegible]

[illegible]

# பொருளடக்கம்


| விடயம் | பக்கம் |
|---|---|
| 1. கல்லூரி | 1 |
| 2. கல்வியின் சிறப்பு | 2 |
| 3. உலகின் அதிசயங்கள் ஏழு | 3 - 5 |
| 4. பொது அறிவு | 6 |
| 5. வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான் | 7 |
| 6. விடுகதைகள் | 8 |
| 7. சிவனொளிபாத மலை | 9 |
| 8. தொடர் மொழிக்கு ஒரு மொழி | 10 |
| 9. தொற்று நோய்கள் | 11 |
| 10. கடல் வளம் | 12 |
| 11. சுக வாழ்வு | 13 |
| 12. பாட்டுக்கொரு புலவன் பாரதி | 14 |
| 13. பிரதோசம் | 15 |
| 14. சிவ சின்னங்கள் | 16 |
| 15. மகா சிவராத்திரி | 17 |
| 16. நான் விரும்பும் தொழில் | 18 |
| 17. கல்வி | 19 |
| 18. சூழல் மாசடைதல் | 20 |
| 19. அன்றொரு நாள் நான் வயலோரத்தில் | 21 |
| 20. நடந்த பொழுது | 21 |
| 21. கடற் கரையில் ஒரு பொன் மாலைப் பொழுது | 22 |
| 22. பழமொழிகளும் அவற்றின் கருத்துக்களும் | 23 |
| 23. ஓவியம் | 24 |
| 24. உலகம் பற்றிய தகவல்கள் | 25 |
| 25. கண் பற்றிய இலக்கணத் தொடர்கள் | 26 |
| 26. விடுகதைகள் | 27 |
| 27. ஓவியம் | 28 |
| 28. ஒலிம்பிக் சம்பந்தமான துணுக்குகள் | 29 |
| 29. காற்று | 30 |
| 30. சுனாமி வந்ததனால் | 31 |
| 31. அழிந்து வரும் மனித நேயம் | 32 |
| 32. விடுகதைகள் | 33 |
| 33. ஓவியம் | 34 |
| 34. சிந்தனைத்துளிகள் | 35 |
| 35. பொது அறிவு | 36 |
| 36. விடுகதைகள் | 37 |
| 37. அதிசய உண்மைகள் | 38 |
| 38. இலங்கையின் வரலாறு | 39 |
| 39. ஓவியம் | 40 |
| 40. Peacock | 41 |
| 41. Rainy Season | 42 |
| 42. The Computer Revoluation | 43 |
| 43. The Tsunami | 44 |
| 44. பொது அறிவு வினாவிடை | 45 - 46 |
| 45. விடுகதைகள் | 47 |
| 46. வானியலாளர்களும் கண்டுபிடிப்புக்களும் | 48 |


ARLTON COLLEGE LIBRARY

# கல்லூரி

கல்லாலின் நிழலில் கவின் பெற நால்வர்க்கு
நல்ஞானம் உணர்த்தவே முயன்றிட்ட தன்மையும்
குருந்த மரநிழலில் நல்லடியார் சூழலில்
பெருந்தவ ஞானத்தை அளித்திட்ட முதல்வனே!
நல்லாசிரியனாய் விளங்கிய தன்மையால்
எழுத்தறிவித்தவன் இறைவனே யாவனென
ஔவையின் பொன்மொழி எழுந்தது தெற்றென
ஆதியில் கல்வியின் கழகமாம் நதியினை
இறைவனே ஆக்கினான் என்பதும் உண்மையாம்
தவநெறி மிக்க நல்முனிவர் குடிசையில்
குரு சிஷ்ய முறையினில் கல்வியை அளித்தனர்
திண்ணையில் இருந்துமே கல்வியைப் பெறுவதற்கு
திண்ணைப் பள்ளிகள் எழுந்தன நல்முற
படிப்படியாகவே கல்வியை வளர்க்கவே
ஆரம்ப, உயர்தர கழகங்கள் தோன்றின
ஒல்லாந்த, ஆங்கில அரசுகள் வந்திட
தம்மதம் வளர்க்கவே கல்லூரிகள் வளர்ந்தன
காலங்கள் சென்றிட சைவர்கள் விழிப்புற
சைவமாம் நெறியினை வளர்க்கவே பலப்பல
கல்லூரிகள் தோன்றின கல்விக்கண் திறந்தது
கலைகளும் வளர்ந்தன மேல்நிலை வந்ததே
வாழ்க! வாழ்க! கல்லூரி

**செ.தர்ஷிகா**
**தரம் 9பி**

# கல்வியின் சிறப்பு

கல்தோன்றா மண்தோன்றா
காலத்தில் மனிதன் தோன்றினான்

மானிடனின் விருத்தியால்
வழியில் தோன்றியதுவே கல்வி

கல்வியின் சிறப்பைக்
கற்றவர் அன்றி
மற்றவர் தான் அறிவாரோ

ARLTON COLLEGE
LIBRARY
NAGAR

கல்வியானது கரையில்லாதது
அதில் நீந்திக் கரைசேர்வது
எட்டாக்கனிக்கு கொட்டாவி
விடுவது போன்றது

கல்வியின் சிறப்பினைக்
கற்றபுலவனே அறிவான்

ஒருநாட்டு மன்னனுக்கு
தன்தேசத்தில் தான் சிறப்பு
ஆனால் கற்றவனுக்குச்
சென்ற இடமெல்லாம் சிறப்பு

கல்வியானது கடல் போன்று ஆழமானது
அதில் சில முத்துக்களையே
மாணவராகிய நாம் பெறமுடியும்.

கல்வியானது கண் போன்றது
கண் இழந்த குருடன் படும் துன்பத்தையே
கல்வி கல்லாதவன் துன்பப்படுகின்றான்

கல்வியானது கரையில்லாதது
அதைக்கற்பவரது
நாட்களானது சிலவானது

கல்வியைக் கற்று
பாரினிலே மாணவர்
சமுதாயம் சிறப்படையட்டும்

**பா.கிருபாகரசர்மா**
**தரம் 9பி**

# உலகின் அதிசயங்கள் ஏழு

இறைவனின் படைப்பில் உலகில் எல்லாமே அதிசயம் தான். பல்வேறு காலகட்டங்களில் காணப்பட்ட மனிதனால் உருவாக்கப்பட்ட சிலவற்றையும் உலகஅதிசயங்களாகக் கருதியிருக்கிறார்கள். இதுவரை இந்த உலகஅதிசயங்களைப் பற்றி நீங்கள் யாராவது தெரிந்திராவிட்டால் அதுவும் ஒரு அதிசயமாகவே இருக்கும்.

உலக அதிசயங்களை அவை காணப்பட்ட காலகட்டங்களின் அடிப்படையில் மூன்று காலகட்டங்களாகப் பிரித்துள்ளனர். ஒவ்வொரு காலகட்டப் பிரிவிலும் ஏழு அதிசயங்களே காணப்படுவதும் ஒரு அதிசயமே. மூன்று காலகட்டங்களையும் பின்வருமாறு அட்டவணைப்படுத்தியுள்ளனர்.

1. புராதன காலத்து அதிசயங்கள்
2. மத்திய காலத்து அதிசயங்கள்
3. நவீன அல்லது தற்கால அதிசயங்கள்

இவற்றில் நாம் புராதன காலத்து அதிசயங்களைக் காணமுடியாது அழிந்து விட்டன. புராதன காலத்து அதிசயங்களில் ஒன்று சியாப்ஸ் மன்னனின் பிரமிட். இது எகிப்தின் நைல்நதியின் மேற்குக்கரையில் பன்னிரெண்டு ஏக்கர் பரப்பில் ஐந்தாயிரம் (5000) வருடங்களுக்கு முன் கட்டப்பட்டது. உரிய இடத்தினை ஒழுங்குபடுத்தவே பத்து வருடங்கள் பிடித்ததாம்.ஒருலட்சம் பணியாளர்களின் இருபது வருட உழைப்பினால் சியாப்ஸ் மன்னனின் கல்லறைப்பணி நிறைவு செய்யப்பட்டது. இதன் உயரம் 481 அடியாகும். மன்னனின் உடல் கெடாது இருக்க பலவித மருந்துவகை, தைலங்கள் பூசப்பட்டு வைக்கப்பட்டது. இது இன்றும் அழியாத நிலையிலுள்ளது.

இரண்டாவது அதிசயம் பபிலோனியா தொங்கு தோட்டம். கி.மு. 600 இல் கட்டப்பட்ட இது 335அடி உயரமானது. அடுக்கடுக்கான மாடிகளில் உருவாக்கப்பட்ட இந்தப்பூந்தோட்டத்திற்கு நீர்விநியோக ஒழுங்குகள் நேர்த்தியாக செய்யப்பட்டு இருநடததாம். இப்போது முழுமையாக அழிந்து விட்டதாம்.

மூன்றாவது அதிசயம் கிரேக்கக் கடவுள் ஜீயசுக்கு செய்யப்பட்ட 40 அடி உயர சிலையாகும். பளிங்குக் கல்லால் செதுக்கப்பட்டு தங்கஆடைகள், தந்த உடல் மாணிக்கங்களால் ஆனது. கிரேக்க சிற்பி ஃபீடியாசினால் உருவாக்கப்பட்டணத. கி.பி.6ம் நூற்றாண்டில் ஏற்பட்ட பூகம்பத்தால் வீழ்த்தப்பட்டு கொண்தாந்திநோபிளுக்கு கொண்டு செல்லப்பட்டது. முகவரி இல்லாமல் போய்விட்டது.

நான்காவது அதிசயம் எஃபிசியஸ் அமைக்கப்பட்ட டயானா தேவதையின் தேவாலயம் ஆகும். 4ம் நூற்றாண்டில் மாவீரன் அலெக்சாண்டரின் காலத்தில் சுமார் 342அடி நீளம், 164 அடி அகலம், 60 அடி உயரத்தில் 127 மிகப்பெரிய தூண்களுடன் நிர்மாணிக்கப்பட்டது. கி.பி.262ல் இடம்பெற்ற படையெடுப்பின்போது எரித்து நிர்மூலம் ஆக்கப்பட்டது யாழ் நூலகத்தைப் போல.

ஐந்தாவது அதிசயம் கி.மு.353 ல் கரியயிலே மௌஸோயில் மன்னரின் நினைவாக அவரது மனைவி கட்டிய சமாதியாகும். இது 140அடிஉயரமானது. வட்டவடிவமானது. பூகம்பத்தால் அழிந்துவிட்டது.

ஆறாவது அதிசயம் ஹீலியாஸ் எனும் சூரியக்கடவுளின் பித்தளைச் சிலையாகும். கி.மு.280ல் கட்டப்பட்டது. 150அடிஉயரம். 15 வருட உழைப்பினால் உருவாக்கப்பட்டது. கி.மு. 224ல் ஏற்பட்ட பூகம்பத்தால் அழிந்துவிட்டது.

ஏழாவது அதிசயம் எகிப்தில் அலக்சாண்டிரியா துறைமுகத்திற்கு அருகில் கட்டப்பட்ட கலங்கரை விளக்கமாகும். 1500 வருடங்கள் ஒளிவீசிய கலங்கரைவிளக்கம் ஒரு பூகம்பத்தினால் அழிந்து போயிருக்கலாம் என ஊகிக்கப்படுகிறது.

மத்திய காலத்தினது முதலாவது அதிசயம் ரோமமக்களின் வேடிக்கை வியைளாட்டிற்காக கட்கப்பட்டிருந்த கோலோசியம் ஆகும். இது குகைகள், அறைகளுடன் நிகழ்வுகளை காண வருபவர்களுக்கு தங்குமிடவசதிகளையும் கொண்டமைந்தது. மற்றும் இவ்விடத்தினை தண்ணீர் கொண்டு நிரப்பி கடற்போர்பயிற்சியும். அளிக்கப்பட்டது. குற்றவாளிகளை விலங்குகளிற்கு இரையாக்கம் இடமாகவும் இருந்தது.

இரண்டாவது அதிசயம் அலெக்சாண்டிரியாவின் குகைகளும் சுரங்கப் பாதைகளுமாகும். லிபியா பாலைவனத்தின் முடிவில் அமைந்துள்ள இதனை முன்பு கிறிஸ்தவ அகதிகள் பாதையாக உபயோகித்தனர்.இது தற்போது முழமையாக அழிந்து விட்டது.

மூன்றாவது அதிசயம் சீனப் பெருஞ் சுவர் ஆகும்இதைப் பற்றி நீங்களே நிறையத் தெரிந்திருப்பீர்கள்.இது சீனாவின் வடபுறமாக எதிரி படையெடுப்பைத் தடுப்பதற்காக கட்டப்பட்டது.1500மைல்கள் நீளமானது. இப்போதும் பராமரிக்கப்பட்டு வருகின்றது.

நான்காவது அதிசயம் கற்களால் ஆக்கப்பட்ட வட்டங்கள்.இங்கிலாந்து சாள்ஸ்பரி சமவெளியில் சூரியபகவானை வழிபடுவதற்காக கட்டப்பட்டது.இது கட்டப்பட்ட காலவரையறை 20ம் நூற்றாணடிற்குள் சிக்கிவிட்டதால் இப்போது இதனை மத்திய கால அதிசயங்கள் பட்டியலிருந்து நீக்கிவிட்டார்கள்.

ஐந்தாவது அதிசயம் போர்சீலியன் கோபுரம். இது சீனாவின் நான்சிங் என்ற இடத்தில் இருந்தது.இந்தக் கோபுரம் 1853ல் புரட்சியாளரால் அழிக்கப்பட்டது.இது 15ம் நூற்றாண்டில் கட்டப்பட்டதாகக் கருதப்படுகிறது.இதன் உயரம் 260 அடியாகும்

ஆறாவது அதிசயம் பைசா நகர கோபுரம். இதன் கதை சற்று சுவாரசியமானது.இத்தாலியின் ஒரு தேவாலயத்திற்கு மணஜ அடிப்பதற்காகக் கட்டப்பட்ட கோபுரமாகும்.கி.பி 1173ல் கட்டப்படும் வேளையில் நிலம் தளர்வாக இருந்ததால் சரியத் தொடங்கியது.பல வழியிலும் சரிவை சரி செய்ய முயன்றார்கள் முடிவில் இதன் கதையோ மாறி பைசாக் கோபுரம் என அதிசயமாக்கப்பட்டது,புகளும் பெற்றது.ஆண்டொன்றிற்கு கால் அங்குல வீதம்சரிந்து விட்டது.இப்போது விழுமா?இல்லையா? எப்போது விழும்?

ஏழாவது அதிசயம் கொன்ஸ்தாந்தி நேபிளில் ஹாசியா சோர்பியாஎன்னும் கிறிஸ்தவப் பள்ளி.கி.பி537 -554ல் ஜஸ்டினியன் சக்கரவர்த்தியால் கட்டப்பட்டது.கி.பி1453ல் துரக்கிய சுல்தான் கொன்சாந்து நேபிளைக் கைப்பற்றியவுடன்

இதனை ஒரு முஸ்லீம் பள்ளியாக மாற்றினான்.இப்போது இது ஒரு அருங்காட்சியகமாகக் காணப்படுகிறது.

இவை ஏழும் மத்திய காலத்தின் உலக அதிசயங்களாகக் கொள்ளப்படுகின்றன.நவீன கால அதிசயங்களாகக் கருதப்படுவதைப் பார்ப்போம்

தற்கால உலக அதிசயங்கனில் முதலாவதாகக் குறிப்பிடக் கூடியது எகிப்தின் பிரமிட்டுக்களாகும் இவற்றின் கட்டட நுட்பம் இன்னும் விடுவிக்க முடியாத புதிராகவே விளங்குகின்றது

இரண்டாவது லறாசியா சோ.ீ.பியா. மூன்றாவது பைசா நகர கோபுரம் இவை பற்றி மத்திய கால அதிசயங்கில் விபரிக்கப்பட்டுள்ளது

தற்காலத்தின் நான்காவது அதிசயம் இந்தியாவின் தாஜ்மகால். இது சாஜஹான் சக்கரவர்த்தி தன் மனைவி மும்தாஜின் நினைவாக எழுப்பியது.முற்றிலும் சலவைக் கல்லினால் கட்டப்பட்ட கல்லறை.கி.பி 1648ல் கட்டப்பட்டதாக வரலாறு கூறுகின்றது.

ஐந்தாவது உலக அதிசயமாக வாஷிங்டன் நினைவு மண்டபம்.இது வாஷிங்டனில் அமைந்துள்ளது.முன்னாள் அமெரிக்க அதிபர் ஜோர் வோஷிங்டன் நினைவாகக் கட்டப்பட்டது.சுமார் 555அடி உயரங் கொண்டது.

ஆறாவது பிரான்சின் பாரீஸ் நகரில் அமைக்கப்பெற்றுள்ள ஈபல் கோபுரம் கி.பி 1847-1889 காலப் பகுதியிலஅமைக்கப்பட்டுள்ளது..948அடி உயரம் கொண்டது வாழ்த்து மடல்கள்,பத்திரிகைகளில் பார்த்திருப்பீர்கள்.நான்கு கால்களுன்றி நிமிர்ந்து நிற்கும்.

ஏழாவது அதிசயம் நியுயோர்க்கிலுள்ள எம்பயர் ஸ்டேட் கட்டடம்.1931ல் கட்டப்பட்டது.இதன் உயரம் 1477அடி.1951ல் 222அடி உயரமுள்ள தொலைக் காட்சிக் கோபுரம் இதனுடன் இணைத்து நிறுவப்பட்டது.

நா.தமிழினி.

தரம் 9B

# பொதறிவு

1. அணுசக்தி நிலையம் முதலில் அமைத்த நாடு யாது?
   ரஷ்யா
2. முதலில் கடல் ஆராய்ச்சி செய்த கப்பல் எது?
   சேலஞ்சர்
3. தக்காளியை முதலில் பயிர் செய்த நாடு யாது?
   அயர்லாந்து
4. உப்புக்கு வரி போட்ட முதல் நாடு யாது?
   சீனா
5. சொக்லேற் அதிகமாகத் தயாரிக்கும் நாடு யாது?
   சுவிற்சர்லாந்து
6. அதிகமாகத் தங்கம் உற்பத்தி செய்யும் நாடு யாது?
   தென்னாபிரிக்கா
7. முதலில் அழகிப் போட்டி நடாத்திய நாடு யாது?
   பெல்ஜியம்
8. கோப்பி அதிகமாக விளைவிக்கும் நாடு யாது?
   பிரேசில்
9. அதிக ஆயதங்களை ஏற்றுமதி செய்யும் நாடு யாது?
   அமெரிக்கா
10. கார்களை அதிகம் உற்பத்தி செய்யும் நாடு யாது?
    அமெரிக்கா
11. வைரம் அதிகமாக வெட்டி எடுக்கப்படும் நாடு யாது?
    தென்னாபிரிக்கா
12. சர்வதேச நெல் ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள நாடு யாது?
    பில்ப்பைன்ஸ்

R.ரஞ்சிதமலர்
தரம்: 9B

# வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான்

இன்று மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கம் அருகிவருகின்றது. தொலைக்காட்சி பார்ப்பதிலேயே அதிக ஆர்வம் செலுத்துகின்றனர். சில மாணவர்கள் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் திரைப்படங்கள், கிரிக்கெற் போன்ற நிகழ்வுகளைப் பார்ப்பதற்காகவே பாடசாலை செல்லாது நின்றுவிடுகின்றனர். அதனால் நேரம் வீண்விரயம் ஆகின்றது. கல்வித்தரமும் குறைகின்றது. நல்ல நண்பர்கள் எனக்கருதும் நூல்களை வாசிக்கத் தவறிவிடுகின்றனர். மாணவர்கள் வாசிப்புக்கு எடுக்கும் நேரம் குறைவானது.

"நூல் பல கல்" என்றார் ஔவையார். எவ்வளவு நூல்களை வாசிக்கின்றோமோ அவ்வளவுக்கு எமக்கு அறிவு வளரும். கண்டதும் கற்கப் பண்டிதன் ஆவான் என்பது ஆன்றோர் வாக்கு. "நூல்களைப் போல சிறந்த கருவூலம் மனிதர்க்கு இருக்க முடியாது" என்றார் கவிஞர் ரஸ்கின். வேறு செல்வங்களைக் கள்வர் களவாட முடியும். ஆனால் பொதுவாக நூல்கள் களவாடப்படுவதில்லை. நூல்களைக் கற்றவனுக்கு வாழ்க்கையில் இன்பம் ஏற்படுகிறது. நூல்களைக் கற்காதவனுக்கு வாழ்க்கை இருண்டதாகவே இருக்கும்.

வாசிப்பின் மூலம் அறிவு விருத்தியடைகிறது. வாசிப்பதால் பல அனுபவங்களையும் கிரகித்தற்தன்மைகளையம் அறிந்து கொள்கிறோம்.

"கண்உடையவர் என்போர் கற்றோர் முகத்து இரண்டு புண்ணுடையோர் கல்லாதவர்" என்றார் வள்ளுவர். ஊனக்கண்ணிலும் ஞானக்கண்ணே சிறந்தது என்பதை இக்குறள் புலப்படுத்துகின்றது. "என்னை எச்சந்தர்ப்பத்திலும் பிரியாத நண்பன் நூல்களே" என கூறியுள்ளார் ஆங்கிலக் கவிஞர். நூல்களைப் போன்ற நல்ல நண்பர்கள் நமக்கு கிடைப்பது அரிது. நண்பகள் மனம் மாறி நம்மை விட்டுப் பிரிந்து விடுவார்கள். ஆனால் நூல்கள் எப்போதும் எம்மோடு கலந்துரையாடவே காத்திருக்கின்றது. நூல்கள் மீது கோபங்கொள்வதோ, சலிப்பதோ, வெறுப்பதோ கிடையாது.

"வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான்" என்றார் அறிஞர் பேக்கன். அவரது கூற்றுக்கமைய நாம் நூல்களை வாசித்தல் வேண்டும். நூல்களை வெறும் பொழுதுபோக்கிற்கு வாசிக்காமல் நமக்குப் பயன் தரும் வகையில் வாசித்தல் வேண்டும். வாழ்வில் சலிப்போ சோர்வோ ஏற்பட்டால் நூல்களை வாசிப்பதன் மூலம் அவற்றைப் போக்கிக் கொள்ளலாம். சமயம், அரசியல், வாழ்க்கை வரலாறு, புனைகதை போன்று நூல்கள் பல உள்ளன. அவற்றில் பயன் தரும் நூல்களை வாசித்தல் வேண்டும். இளமையிலிருந்து வாசித்தல் சிறந்த பழக்கமாகும். அன்னப்பறவையானது நீரைவிலக்கிவிட்டுப் பாலைக் குடிப்பதுபோல தேவையான பொருத்தமான நூல்களை வாசித்தல் வேண்டும்.வாசிப்பதன் மூலமே அறிவு வளரும். வாசிப்பால் மனிதன் பூரணமடைகின்றான். உலகில் உயர்ந்தவனாகின்றான். மாண்புடன் வாழ்கின்றான்.

**நூல் பல கற்போம்! நுண்ணறிவு பெறுவோம்.**

யோ.ஜஸ்மினா
தரம் : 9A

CARLTON COLLEGE
LIBRARY
KALMUNAGAR

# விடுகதைகள்

1. உப்பைத் தின்றவன் உறங்காமல் திரிகின்றான் அவன் யார்?

   கடல்

2. ஏறுவான் இறங்குவான் வாழ்க்கைத்தத்துவம் சொல்வான் அவன் யார்?

   ராட்டினம்

3. தடி போல் வளர்ந்தான் கடித்தபோது இனித்தான் அவன் யார்?

   கரும்பு

4. மூலையில் கிடந்தாலும் முழுஅசுத்தத்திற்கும் அலன் தான் பொறுப்பாளி அவன் யார்?

   துடைப்பம்

5. தோட்டா இல்லாமலே வெடிப்பான் திம்மப்பன் அவன் யார்?

   தும்மல்

6. கறுப்பன் வெள்ளையான போது கண்டதிம்மப்பன் அவன் யார்?

   தலைமுடி

7. நான் சொன்னதையே எனக்கு திரும்பச் சொல்வான் அவன் யார்?

   எதிரொலி

8. நிறுத்தாமல் ஓடிக் கொண்டிருப்பான் நின்றால் திரும்பி வரமாட்டான் அவன் யார்?

   உயிர்

9. பூ பிஞ்சானது காயானது ஆனால் கனியாகவில்லை அது என்ன?

   பஞ்சு

10. காலையில் அண்ணனும் அரவில் தம்பியும் வருவார்கள் அவர்கள் யார்?

    சூரியன், சந்திரன்

**பே.டேஸ்பிரியா**

**தரம் 9A**

# சிவனொளிபாதமலை

எமது இலங்கை நாட்டின் தென்மத்திய பாகம் மலைவளம் உள்ளதாகும். அங்கே மிக உயர்ந்து நெருங்கி இருக்கும் மலைகளில் சிவனொளிபாதமலை ஒரு தனிச்சிறப்புடையது. இது பண்டைக்காலம் தொடங்கி தெய்வத்தன்மை பொருந்தியது என பல மதத்தவர்களாலும் போற்றப்பட்டு வருகின்றது. சாதிசமய வேற்றுமையின்றி சகல மக்களும் ஒன்றுபட்டு இம்மலைக்கு ஆண்டு தோறும் யாத்திரை செய்கின்றனர். இந்துக்களாலும் பௌத்தர்களாலும் முஸ்லீம்களாலும் கிறிஸ்தவர்களாலும் இதனை தத்தம் புண்ணிய தலமாக கருதி வழிபட்டு வருகின்றனர்.

இம்மலை இவ்வாறு எல்லோராலும் போற்றப்படுவதற்குக் காரணம் இதன் உச்சியில் ஓர் அடிச்சுவடு காணப்படுகின்றமையாகும். இவ்வடிச்சுவட்டினை இந்துக்கள் சிவனுடையதென்பர். பௌத்தர்கள் புத்தபிரானுடையது என்பர். முஸ்லீம்கள் பாவா ஆதாமுடையது என்பர். கிறிஸ்தவர் தோமஸ் நாயனாருடையது என்பர். அதனால் இம்மலையை இந்துக்கள் சிவனொளிபாதமலை என்றும் பௌத்தர்கள் ஸ்ரீபாதம் என்றும் முஸ்லீம்கள்-கிறிஸ்தவர்கள் ஆதாம்மலை என்றும் சிறப்பாகக் கூறுவர்.

சிவனொளிபாதமலையின் உயரம் ஏழாயிரத்து முந்நூற்று அறுபது அடியாகும். இதன் அடிவாரத்தில் இருந்து களனிகங்கை, களுகங்கை, வளவகங்கை எனும் நதிகள் ஊற்றெடுத்துப் பாய்கின்றன. இம்மலையை அடைய இருவழிகள் உண்டு. ஒன்று ஹற்றன்-மஸ்கெலியா வழியாக செல்வது. மற்றது இரத்தினபுரி வழியாகச் செல்வது.

இம்மலைமீது ஏறுவதும் இறங்குவதும் மிகச்சிரமம். இம்மலைக்குச் செல்வதற்கு பங்குனி, சித்திரை, வைகாசி போன்ற மாதங்களே சிறந்தது. ஏனைய மாதங்களில் குளிர் அதிகம். இம்மலை சாதி, சமயவேறுபாடின்மைக்கு இலக்காக விளங்குவது எமது நாட்டின் ஒரு பெரும் சிறப்பாகும்.

க.நிசாந்தினி

தரம் 9A

# தொடர் மொழிக்கு ஒரு மொழி

- சொற்களை அகர வரிசைப்படி குறிப்பிட்டு அவற்றின் பொருளைக் கூறும் நூல்.

  ○ அகராதி

- வயோதிபம், நோய் முதலிய இயற்கைக் காரணிகளால் இறக்காது எதிர்பாராமல் மரணம் சம்பவித்தல்

  அகால மரணம்

- கடவுள் உண்டென நம்புபவன்

  ஆத்திகன்

- ஒருவர் இறந்த பின்னர் செய்யப்படும் சமய சம்பந்தமான இறுதிக் கிரியைகள்

  ஈமக் கிரியைகள்

- கண் மூடித்தனமாகப் பணத்தை வீணே செலவு செய்பவன்

  ஊதாரி

- சுவை, ஒளி ஊறு,ஓசை, நாற்றம் எனும் ஐந்து உணர்வுகள்

  ஐம்புலன்கள்

- மற்றோர் உயிர்ப் பொருளிலிருந்து தன உணவை உறிஞ்சி வாழும் பிராணி அல்லது தாவரம்

  ஒட்டுண்ணி

- அறிவுத் துறை பற்றிய விடயங்களை தொகுத்தும் பகுத்தும் அகரவரிசைப்படி திரட்டித் தருவது

  கலைக்களஞ்சியம்.

**த.வித்தியாதரன்**
**தரம் 9A**

# தொற்று நோய்கள்

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பது பெரியோர்களுடைய அனுபவத்தால் கண்டு கூறிய முதுமொழியாகும். அந்தக் குறைவற்ற மனிதர்களைப் பார்ப்பது மிகவும் அரிதாகும். மனிதன் எப்போதோ ஏதோ ஒருவகையில் நோயினால் பாதிக்கப்படுகின்றான். அந்நோய்களில் ஒருவகை மனிதனைத் தாக்கி நோய் விளைவிக்கின்றன. சாதாரணமான நோய்கள் இன்னொரு வகையைச் சார்ந்தவை. அவைதான் தொற்றுநோய்கள்.

அம்மைநோய், வாந்திபேதி, கொலரா, நெருப்புக் காய்ச்சல், சின்னமுத்து, மலேரியா போன்றன தொற்றுநோய்கள் எனும் வட்டத்துக்குள் அடங்குகின்றன. இத்தொற்றுநோய்களுக்கு காரணியாக அமைபவை நுண்ணங்கிகள், கிருமிகள் ஆகும். இவைகள் சாதாரண கண்ணுக்குத் தெரியாதவை. இவை காற்று, நீர், உணவு என்பன மூலமும் நுளம்பு, ஈக்கள் மூலமும் பரவுகின்றன. அம்மைநோய், வாந்திபேதி, நெருப்புக் காய்ச்சல் என்பன காட்டுத்தீ போல் வெகுவிரைவில் பரவக்கூடியன.

தொற்றுநோய் தொற்றுவதற்கு மூலகாரணியாய் அமையக்கூடியது அசுத்தம் ஆகும். அழுக்கு நிறைந்த இடங்களிலும் குடிசனம் நெருக்கமான இடங்களிலும் தொற்றுநோய்கள் வேகமாகப் பரவுகின்றன. சுகாதாரவசதிகளற்ற சேரிப்புறங்களில் வசிப்பவர்கள் அடிக்கடி தொற்றுநோய்களால் அவதிப்படுகின்றார்கள். அசுத்தநீரும் ஈக்கள்-நுளம்புகளும் உருவாவதற்குக் காரணம் மலசலகூடம் இல்லாமையாகும்.

தொற்றுநோயை நிவர்த்தி செய்ய வேண்டிய விதிமுறைகளைக் கைக்கொள்ள வேண்டும். நோயாளியைத் தனிமைப்படுத்தி காற்றோட்டவசதியுள்ள தனியறையில் படுக்க வைத்தல் வேண்டும். அவரைப் பராமரிப்பதற்கு தடுப்பு மருந்து ஏற்றப்பட்ட ஒருவரை நியமித்தல் வேண்டும். நோயாளியை எவரும் தீண்டுதல் கூடாது. இவ்வாறு தொற்றுநோய் உள்ளவர்களைப் பராமரிப்பதன் மூலமும் சுத்தமாக இருப்பதன் மூலமும் இந்நோய்களில் இருந்து நம்மைப் பாதுகதத்துக் கொள்ளலாம்

த.உஷா
தரம் : 9B.

HARTLEY COLLEGE LIBRARY KANKESANTURAI

# கடல்வளம்

உலகவாழ்க்கைக்கு முதற்காரணமாகிய சிறப்பு கடலுக்கே உரியது. கடல் இல்லையாயின் தரையில் பிராணிகள் சீவிக்கமாட்டாது. கடலே மழையைத் தருகிறது. சூரியவெப்பத்தைச் சமப்படுத்தகின்றது. சுத்தமான காற்றை வீசச் செய்கிறது.

கடற்காற்றால் பலவிதமான நோய்கள் நீங்குகின்றன. கடலில் குளிப்பதால் சொறி, சிரங்கு போன்ற தொற்று நோய்கள் நீங்குகின்றன. கடலினது மனோரம்மியமான காட்சி மனதுக்கு இதமானதாகும்.

கடல் தரும் செல்வங்கள் முத்து, பவளம், சிப்பி, சோகி, ஊரி, பல்வகை மீன், உப்பு, பாசி என்பனவாகும். முத்தும் பவளமும் நவரத்தினவகையைச் சார்ந்ததாகும். முத்து இலங்கைக் கடலில் உள்ள சிலாபம், மறிச்சுக்கட்டி எனும் இடங்களில் காணப்படுகின்றது. இவற்றுடன் இடம்புரி, வலம்புரி முதலிய சங்குகளும் கடலில் வசிக்கின்றன.

கடல்வளத்தின் உப்பு உணவுப் பொருட்களுக்கு முக்கியமானதாகும். உப்பில்லாப் பண்டம் குப்பையிலே எனும் பழமொழி கூட உண்டு. ஆனையிறவு, அம்பாந்தோட்டை போன்ற இடங்களில் உப்பு விளைவிக்கப்படுகின்றது. நாடுகளுக்கிடையில் காணப்படும் கடற்பாதைகளும் இன்றைய போக்குவரத்திற்கும் ஏற்றுமதி, இறக்குமதிக்கும் உகந்ததாகும்.

க.நிசாந்தினி
தரம் 9ஏ

# சுக வாழ்வு

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். என்பது முதுமொழி. எனவே நாம் நோயின்றி வாழ வழிவகுத்துக் கொள்ள வேண்டும். சுகவாழ்வுக்கு சுத்தமான காற்று,சூரிய வெளிச்சம்,உடற்பயிற்சி,சத்துக்கள் நிறைந்த உணவு என்பன அவசியமானவையாகும்.

சூரிய ஒளி நிறைந்த இடத்தில் தேகப்பியாசம் செய்தல் வேண்டும். அழுக்கு நிறைந்த இடங்களில் வாழக் கூடாது. வீட்டில் அழுக்கு நிறைந்த பொருட்களைச் சேர விடக் கூடாது. உடனுக்குடன் அவற்றை அகற்றி விட வேண்டும். அவற்றைத் தேங்க விட்டால் தொற்றுக் கிருமிகள் அவற்றிலிருந்து பெருகி நோய்களைத் தோற்றுவிக்கும். இதனால் மனிதனின் வாழ்வில் சுகம் கெட்டுவிடும்.

பகலில் நித்திரை செய்யக் கூடாது. அது சோம்பலை உண்டாக்கும். எச்சில் உணவையோ அல்லது பழுதடைந்த உணவையோ உண்ணக் கூடாது. எவ்வளவுக்கு சுத்தமாக இருக்கின்றோமோ அவ்வளவிற்கு சுகமாக வாழ முடியும். எனவே தான் சுத்தம் சோறு தரும் என்பர். சுகவாழ்வே எமது இலட்சியமாக இருத்தல் வேண்டும். இதற்கான வழி முறைகளை நாம் பின்பற்றுதல் அவசியமாகும்.

வை.சிந்துஜா
தரம்: 9ஏ

# பாட்டுக்கொரு புலவன் பாரதி

"பாட்டுக்கு ஒரு புலவன் பாரதியடா —அந்தப்
பாட்டை பண்ணோடோவன் பாடினானடா
அதைக் கேட்டுக் கிறுகிறுத்துப் போனானடா

அந்தக் கிறுக்கிலும் மொழி சொல்லுவாயடா" என்ற பாடல் வரிகள் இன்றும் எங்கள் காதுகளில் ரீங்காரம் செய்துகொண்டிருக்கின்றன. இந்தப் பாரதியாரின் 122வது பிறந்த தினம் கொண்டாடப்பட்டது.

"தமிழ் வானில் ஒளி வீசும் தாரகை!
தன்னிகரில்லாத் தண்டமிழ்க் கவிஞன்!

இறவாப்புகழ் பெற்ற அழியாப் படைப்புகள் செய்த வரகவி!" இவரே நான் மிக விரும்பும் பெரியார் ஆவார்.

1882ம் ஆண்டு மார்கழி மாதம் 11ம் நாள் எட்டயபுரத்திலே பாரதியார் பிறந்தார். சின்னச்சாமிஐயரும் இலக்குமிஅம்மாளும் செய்த தவப்பயனால் இவர் தம் பெற்றோர் ஆயினர். ஐந்து வயதில் தாயை இழந்த இவர் தந்தையின் அரவணைப்பில் வளர்ந்தார்.

சுப்பிரமணியன் என்பது இவரது இளமைப் பெயராகும். அருவிகளையும் குருவிகளையும் நீலக்கடலையும், நெடிதுயர்ந்த மலைகளையும் அவர் விரும்பி ரசித்தார். சுயமாக கவியாற்றல் கொண்டதால் வரகவி எனப் புகழப்பட்டார்.

பதினொராம் வயதில் இவருக்கு இவர் தம் கவித்திறமையால் பாரதி எனும் பட்டம் பண்டிதர்களால் வழங்கப்பட்டது. இவர் சுதந்திரத்தின் மீது தணியாத தாகம் கொண்டு புரட்சிப் பாடல்களைப் பாடினார். இவரது பாப்பாப்பாட்டு, கண்ணன் பாட்டு, குயிற்பாட்டு, பாஞ்சாலி சபதம் போன்ற படைப்புகள் பெரும் புகழ் பெற்றவை. பெண்விடுதலைக்காக சுதந்திர இந்தியாவைக் கண்டு பள்ளுப் பாடல்கள் பாடினார். பல பத்திரிகைகளை நடாத்தினார்.

இவர் தந்த ஆக்கங்கள் பலவும் தமிழன்னைக்கு அழகிய ஆபரணங்கள் ஆயின. வான் வரை இவரது புகழ் விரிந்தது. 1921ம் ஆண்டு புரட்டாதி மாதம் 12ம் திகதி இறையடி சேர்ந்தார். ஆனால் காலத்தை வென்ற இவரது கவிதைகளுக்கு இறப்பென்றும் இல்லை. இவர் பற்றிய எண்ணங்கள் என்றென்றும் மக்கள் மனத்தில் வாழுமென்பது திண்ணம்.

செ.தர்ஷிகா.
தரம்: 9பி

# பிரதோசம்

தேவர்களும் அசுரர்களும் சாவாமருந்து பெறுவதற்காகப் பாற்கடலைக் கடைந்தார்கள். கடல் பெரியது என்றமையால் மந்திரமலையை மத்தாக நாட்டினார்கள். அதிலே வாகி எனும் பாம்பை சுற்றிக் கடையத் தொடங்கினார்கள். பாம்பு வருத்தம் தாங்க முடியாது விடம் கக்கியது. அந்த விடம் கடைந்து கொண்டிருந்த தேவர்களைத் துரத்தியது. அவர்கள் பீதியடைந்து ஓலமிட்டுக் கொண்டு சிவபெருமானிடத்தில் சரண்புகுந்தார்கள். விடம் அவர்களை விட்டபாடில்லை.டி தொடர்ந்து துரத்தியது. அதனால் அவர்கள் அல்லோலகல்லோலப்பட்டு சுவாமியைச்சுற்றி இடப்புறமாக ஓடினார்கள். விடம் வலப்புறமாக விரைந்து வந்து வழிமறித்தது. அவர்கள் வந்த வழியே திரும்பிச் சுவாமியை சுற்றி வலப்புறமாக ஓடினார்கள். விடமும் திசைதிரும்பி இடப்புறமாக வந்த அவர்களை எதிர்கொண்டது.

இவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த சிவபிரானுக்கு பேரிரக்கம் வந்தது. விடத்தைப் பிடித்துவரும்படி தம் அடியாரான சுந்தரரைப் பணித்தார். சுந்தரர் பெருமானின் அடியாரானமையினால் பேராற்றல் உடையவர். அவர் விடத்தை அங்கையில் அடக்கிக் கொண்டு வந்து சுவாமியிடம் கொடுத்தார். சுவாமி அதை உடனே அமுதமெனப் பருகினார்.

விடம் சுவாமியின் தொண்டை வழியே இறங்கிக் கொண்டிருந்தது. கூட இருந்த உமையம்மையார் பயந்து நாதரின் கண்டத்தை இறுக்கிப் பிடித்தார். நஞ்சும் செலவு நீங்கி கண்டத்தே நின்று பாரித்து விட்டது. இந்த நீலக்கறை சுவாமியின் பேரருட்செயலுக்கு அறிகுறியாக நிலவுகிறது. சுவாமி திருநீலகண்டர் என்ற பெயரையும் பெற்றார்.

இது நிகழ்ந்தது ஒரு திரியோதசித்திதியிலே. அன்று சூரியன் மறைவிற்கு முன்னும் பின்னும் மூன்றேமுக்கால்நாழிகைகள் நந்திகேசுவரரின் கொம்புகளுக்கிடையில் நின்று நஞ்சுண்டகண்டர் நடனமாடினார். சுவாமி இப்படி நடனமாடிய முகூர்த்தம் பிரதோசகாலம் எனப்படும். இவ்வாறு புராணங்கள் கூறுகின்றன. சிவத்தலங்களில் பிரதோச காலங்களில் நந்திகேசுவரருக்கும் சிவலிங்கப்பெருமானுக்கும் விசேட பூசைகள் நடைபெறும். அவற்றைத் தொடர்ந்து உமையுடன் கூடிய உற்சவமூர்த்திக்கு விசேடபூசையும் தீபாராதனைகளும் நடைபெறும். அதன்பின் மூர்த்தியை உமாசகிதராய் இடபத்தின் மீது எழுந்தருளப்பண்ணி வீதிவலங் கொண்டுவருவார்கள்.

பிரதோசகாலத்தில் சிவாலயதரிசனம் செய்தல் மிகுந்த போற்றத்தகு ஒழுக்கமாகும். அக்காலத்தில் கோயில் கும்பிடுவோர் இடமாகவும் வலமாகவும் வீதிசுற்றுவதை நாம் காணலாம். பாற்கடல் கடைந்த அன்று தேவர்கள் நடந்து கொண்ட றையில் நடப்பதே இதன் நோக்கமாகும். இதனால் இறைவனுடைய பேரருட்திறத்தினை நினைந்து மனத் தூய்மை அடைகிறோம். இம்மட்டோடு அமையாது நாம் பிதோச காலத்தில் பாடும் திருமுறைப் பாட்டுக்களையும் விடமுண்ட திருச்செயல்களைக் குறிப்பனவாய் தெரிந்தெடுத்துப்பாடுதல் மிகவும் பொருத்தமானது. பலபக்தர்கள் பிரதோச தினத்தன்று நோன்பிருப்பார்கள். இவர்கள் பகல் முழுவதும் உணவு உண்ணாதிருந்து பிரதோச காலத்தில் சுவாமி தரிசனம் செய்து அக்காலம் கழிந்தபின்னர் சிவநேயச் செல்வர்களுடன் இருந்து உண்பார்கள். இவ்விரதம் ஐப்பசி, கார்த்திகை, சிதிதரை, வைகாசி ஆகிய மாதங்களில் ஒன்றில் வரும் சனிப்பிரதோசம் தொட்டு அனுட்டிக்கப்படும். பிரதோச காலத்தில் விதிப்படி மெய்யன்போடு சிவாலயதரிசனம் செய்துவரின் கடன், வறுமை, நோய், பயம், கிலேசம், அவமிருத்து, மரணபயம், ஆகியவை நீங்கும். தீவினைப்பயம் அருகும். சகலசிறப்புக்களும் உண்டாகும். பிரதோசகாலத்தில் வீதிசுற்றும் முறையினை நாவலரின் இரண்டாம் சைவவினாவிடையிலும் ஒன்பதாம் தரசைவநெறிப் புத்தகத்திலும் தெளிவாக அறியலாம்.

**தே.தர்சினி**
**தரம் 9பி**

# சிவசின்னங்கள்

உடலில் இயங்குவது உயிர். உயிருக்குயிராய் நிற்பவன் இறைவன். அவனை நினைவு ஊட்டுவது விபூதியும் உருத்திராக்கமும் ஆகும். விபூதி என்பது தமிழில் திருநீறு ஆகும். எவர் சிவசின்னங்களைத் தரிக்கிறாரோ அவரை நாம் இறைவனாகப் போற்றவேண்டும். திருநீறு அணிந்தவர்களை சிவபெருமானாகவே மதித்து அடியார்கள் போற்றினர். இதனால் நாயனார் மன்னித்தார். அவனுடைய நெற்றியில் திருநீற்றைக் கண்டார். கண்டவுடன் போர் செய்வதை நிறுத்தினார். திருநீறு சிவபெருமானை நினைப்பித்தது. அன்பே உருவான இறைவனின் பிள்ளைகள் நாம் என்ற எண்ணத்தை உதிப்பித்தது. அதனால் அன்பு பிறந்தது. எனவே நெறிக்கு நன்மை இட்டுச் செல்வது திருநீறு ஆகும்.

**கி.நிரோசினி**
**தரம் 9 ஏ**

ARLTON COLLEGE
LIBRARY

# மகா சிவராத்தரி

முன்னொரு பொழுது பிரமா உலகங்களையும் அங்கே இயங்கும் உயிர்களின் அழகிய உடல்களையும் அவை நுகரும் போகப் பொருட்களையும் பார்த்தார். "இவற்றையெல்லாம் நானன்றோ படைத்தேன். என்னில் மேலான வேறொரு கடவுள் இல்லை. நானே பரம்பொருள்" என்று செருக்கடைந்தார். இவ்வாறு செருக்கடைந்த பிரமா திருமாலிடம் சென்றார். அவர் பாற்கடலில் பள்ளி கொண்ட வண்ணம் இருந்தார். பிரமன் அது கண்டு "என்வரவையும் மதியாது நித்திரை செய்கின்றாயே எழுந்திரு" என்று சொல்லி அவருடைய மார்பில் குத்தினார்.

திருமால் எழுந்தார். "நீ யார்? சொல்" என்று பிரமா அதட்டினார். "மைந்தனே என்னைத் தெரியாதா? நான்தான் உனது தந்தை என்றார் திருமால். பிரமாவுக்கு இதைக்கேட்டதும் சிரிப்பு உண்டாயிற்று. "உனக்கு இன்னும் நித்திரை முறியவில்லைப் போல் இருக்கிறது. வீணாகப் பிதற்றாதே. நீ எனக்குத் தந்தை என்ற செருக்கை விட்டுவிடு. நீ பத்துப் பிறப்பகள் எடுத்தாயே. உன்னுடைய அந்தப் பத்து உடல்களையும் என் கைகளும் கன்றிவிட்டன. இதோ பார்" என்றார் பிரமா.

திருமாலுக்குக் கோபம் வந்தது. "பரமசிவன் கிள்ளிய உன்தலையை இன்னும் படைத்துக் கொண்டாயில்லை. அப்படிப்பட்ட நீயா என் பிறவிகளைப் படைத்தாய்? உன்பேச்சு வேடிக்கையாக இருக்கிறது. நானின்றி உலகில் எந்தப் பொருளும் உண்டாகாது. நாரணனும் நான்.,மறையும் நான்., மறைப்பொருளும் நான்., அந்தப் பரமசிவனும் நான்., யாவையும் நான்" என்று திருமால் பலவற்றைச் சொன்னார்.

வாக்குவாதம் முற்றிக் கைகலப்பு எற்பட்டது. போர் சற்றும் தளராது நடந்து கொண்டிருந்தது. அப்பொழுது அவர்கள் செருக்கை அடக்கச் செம்மனத்தவரான சிவபெருமான் திருவுளம் கொண்டார். இருவருக்குமிடையில் சோதிப்பிழம்பாகத் தோன்றினார். திருமாலும் பிரமாவும் நடுநடுங்கிப் போர்விடுத்துப் பயந்து நின்றனர். அப்பொழுது" சிறுவர்களே! உங்கள் வலிமையைக் காட்ட இச்சோதியின் அடியையும் முடியையும் காணுங்கள்" என்றொரு விண்வாக்கு எழுந்தது.

திருமால் பெரியதொரு பன்றிவடிவங் கொண்டு அடியைத்தேடி கீழே அகழ்ந்து சென்றார். பிரமா அன்னப்பறவை வடிவங் கொண்டு மேலே போனார். ஆயிரமாயிரம் ஆண்டுகள் தேடியும் அடியைக் காணாது திருமால் பூமியின் மேலே வந்து சோதிக்கு அண்மையில் ஒதுங்கி நின்றார். முடியைக் காணாத பிரமாவும் திருமால் இருக்கும் இடத்தைச் சேர்ந்தார். செருக்கொழிந்த இருவர் மனமும் இறைவனிடத்தில் சரணடைந்தன. ஒரு சிவலிங்கம் அமைத்து இருவரும் வழிபாடு செய்தனர். அப்பொழுது சிவபெருமான் தோன்றி அவர்களுக்கு அருள்புரிந்தார். பின்னர் சோதியினுள் மறைந்தருளினார்.

வோதியும் சுருங்கி வந்து ஒரு சிறுமலையாக அமைந்து நின்றது. சோதிப்பிம்பாகத் தோன்றிய இறைவன் திருமாலுக்கும் பிரமாவுக்கும் அருள் சுரந்த நாள் கார்த்திகை மாதத்து முழுமதித்தினம் ஆகும். அன்று விளக்கீடு கொண்டாடியும் சொக்கப்பானை எரித்தும் சிவபெருமான் சோதிப்பிழம்பான அருட்செயலை நாம் ஞாபகப்படுத்திக் கொள்கிறோம்.

ஞா.தர்சினி
தரம் : 9B

# நான்விரும்பும் தொழில்

உலகிலுள்ள தொழில்களில் மக்கள் உயிர் காக்கும் தொழில் வைத்தியமாகும். அதுவே நான் விரும்பும் தொழில். நோயால் வாடும் மக்களின் துயர் தடைப்பவனே வைத்தியனாவான். அவன் பயன் கருதாது பணி செய்பவன். சாலை மாலை என்று பாராது எந்நேரமும் மக்கள் பணிசெய்ய அவன் கடமைப்பட்டுள்ளான்.

ஏழை, பணக்காரன், தாழ்ந்தவன், உயர்ந்நதவன் என்று பேதம் பாராது அனைத்துயிருக்கும் தொண்டாற்றுபவன் வைத்தியன். அவனது தொழில் புனிதமானது. இப்பனிதமான தொழிலில் ஈடுபடுவதே எனது இலட்சியமாகும்.

உயிர்களைப் பிடித்து வாட்டும் பிறவியைப் பிணியைப்போக்கி அவர்களுக்குப் பேரின்பத்தை வழங்குபவன் இறைவனாவான். அவன் வைத்தியநாதன் என்று அழைக்கப்படுகின்றான். இம்மண்ணுலகிலே நோயால் வாடும் மக்களின் துன்பத்தைப் போக்குபவன் வைத்தியன். அவன் கண்கண்ட கடவுளாகப் போற்றப்படுகின்றான்.

தாகத்தால் தவிப்பவனுக்கு தண்ணீரே மிகவுயர்ந்த பொருளாகும். அதேபோல் நோயால் வருந்துபவனுக்கு அவனது நோய் நீக்குதலே மிகஉயர்ந்த பொருளாகும். இதனை நிறைவேற்றவல்லவன் வைத்தியன். உயிர் காக்கும் இந்த உத்தமத் தொழிலில் சென்ற இடமெல்லாம் சிறப்புண்டு. மக்கள் மதிப்பும் உண்டு.

இன்று இத்தொழிலில் ஈடுபட்டோருக்கு அரசு மிகவும் மதிப்பளிக்கிறது. உயர்ந்த ஊதியமும் வழங்குகிறது. நான் வைத்தியத் தொழிலில் ஈடுபடுவதன் மூலம் நல்ல வருமானத்தையும் பெறுவேன் இதன் மூலம் மக்களுக்கு தொண்டு செய்யும் வாய்ப்பைப் பெறுவேன்.

வைத்தியத் தொழிலுக்கு வயதுக்கட்டுப்பாடே இல்லை. இத் தொழிலில் ஈடுபடுபவர்கள். இறுதிவரையும் தொண்டாற்றமுடியும். ஏனைய தொழில்களில் இத்தகைய வாய்ப்பு வசதி இல்லை.

வைத்தியத் தொழிலில் ஈடுபவதன் மூலம் அத்தொழிலில் மேன்மேலும் சிறந்த பயிற்சியைப் பெறமுடியம். இதன் மூலம் என் மதிப்பு உயரும்.

ஆகவே உலகில் சிறந்த தொழில் வைத்தியத் தொழிலே ஆகும். உயிர் காக்கும் இத்தொழிலை நான் விரும்பம் விரும்புகிறேன்.

**இரஞ்சிதமலர்**
தரம் 9B

# கல்வி

கல்வி என்பது மனிதனுக்கு அறிவூட்டும் ஒளிவிளக்குப் போன்றது. மனிதரிடம் உள்ள அறியாமையைப் போக்கி நல்வழி காட்டவல்லது. கற்றறிந்தவனே கண்ணுடையவனாகக் கருதப்படுகின்றான். கல்வியறிவில்லாதவன் கண்களிருந்தும் குருடனாகவே கருதப்படுகின்றான். இதனைத் திருவள்ளுவர்

" கண்ணுடையவவென்பர் கற்றோர் முகத்திரண்டு புண்ணுடையர் கல்லாதவர்" என்று திருக்குறளில் சிறப்பாகக் கூறியுள்ளார்.

மனிதராகப் பிறந்த ஒவ்வொருவரும் கற்கவேண்டியவற்றை கற்கும் பருவத்திலேயே கற்க வேண்டும். உலகில் இருவகைச் செல்வங்கள் உள்ளன. ஒன்று கல்விச் செல்வம் மற்றயது பொருட்செல்வம். பொருட்செல்வம் பிறருக்குக் கொடுக்கக் கொடுக்கக் குறையும். வெள்ளத்தால், நெருப்பால் அழியும். கள்வரால் கவரப்படும். எவ்வளவு பொருட்செல்வத்தை நாம் தேடிவைத்தாலும் அவை நிலைப்பதில்லை. ஆனால் கல்விச் செல்வமானது நிலையானது. அழியாதது. பிறருக்கக் கொடுக்கக் கொடுக்க பெருகிக் கொண்டே செல்லும். கள்வராலோ, தீயாலோ, வெள்ளத்தாலோ அழியாதது.

கற்றவர்கள் எங்கு சென்றாலும் அவர்களுக்குச் சிறப்பு. ஆனால் அரசனுக்கு தன் நாட்டில்தான் சிறப்பு. ஒருவனுக்கு கல்வியழகே உண்மையான அழகாகும். கல்வியழகைப் பெறுவதற்கு நாம் முயற்சி செய்தல் வேண்டும். கல்வியறிவாலேயே நாமும் நாடும் முன்னேற முடியும். இதனை நன்குணர்ந்து கல்விச் செல்வத்தைப் பெருக்கிக் கொள்ள நாம் ஒவ்வொருவரும் முயற்சி செய்தல் வேண்டும்.

ப.டயாழினி
தரம் : 9A

# சூழல் மாசடைதல்

உலகம் விஞ்ஞானத்தின் விந்தைகளால் எவ்வளவு முன்னேறுகின்றதோ அவ்வளவிற்கு உலகின் சூழலும் மாசடைந்து ஓசோன்படலத்திலும் துவாரம் உண்டாகி உயிரினம் வாழமுடியாத கிரகமாக எங்கள் பூமி மாறினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஆகவே நாம் எங்கள் சூழலை மாசடையாமல் பாதுகாக்க வேண்டும். எனவே நாம் சூழலை மாசுபடுத்துவன் பற்றிச் சிறிது நோக்குவோம்.

இப்போது எங்கள் வீடுகளில் தேங்காயைத் துருவிவிட்டு அதன் சிரட்டைகளளைறிந்து விடுகின்றோம். இதுமட்டுமன்றி வாகனங்களுக்குப் பாவித்த பழைய டயர்களையும் எறிந்துவிடுகிறார்கள். அவை வெளியில் கிடக்கும்போது மழைநீர் தேங்கிவிடும். பின் அந்தநீரில் நுளம்புகள் முட்டையிட்டுப் பெருகுகின்றன. இதனால் நமக்கு டெங்கு, மலேரியா, யானைக்கால், ஜப்பானிய மூளைக்காய்ச்சல் போன்ற பல கொடிய நோய்கள் உருவாகும். இது எம்மை மட்டுமின்றி சூழலையும் பெரிதும் பாதிக்கின்றது. எனவே நாம் எமது சூழலில் உள்ள சிரட்டைகள்,டயர்கள் போன்றவற்றைப் புதைக்க வேண்டும். அவ்வாறு புதைத்தால்தான் சூழலைப் பாதுகாக்கலாம். சனத்தொகை அதிகரிப்பால் தொழிற்சாலைகள் பல உருவாகின்றன. அத்தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் கழிவுப் பொருட்கள் ஏரி, குளம், கடல் போன்றவற்றுடன் கலக்கின்றன. அதற்கு ஓர் உதாரணமாக அண்மையில் வவுனியாக் குளத்தில் மீன்கள் செத்துக் காணப்பட்டது எல்லோரும் அறிந்ததே. ஆகையால் கழிவுகளை அகற்றுவதில் போதியளவு கவனமெடுத்து பாதுகாப்பு முறைகளைக் கையாள வேண்டும்.

நாடுகளில் மக்களின் அதிகரிப்பால் அவர்கள் வாழும் உறைவிடம் தேவை என்பதால் காடுகளை வெட்டித் தம் தம்உறைவிடங்களை உருவாக்குகிறார்கள். அதனால் மழைபெய்யாது வரட்சி நிலவ ஏதுவாகின்றது. இதனால் மண்ணரிப்பு, கடலரிப்பு, மண்மாசடைதல் என்பன எற்படுகின்றன. அது மட்டுமன்றி காபனீரொட்சைட் வாயு அதிகரிப்பதனால் சூழலும் மாசடைகிறது.எனவே இதனை நிவர்த்தி செய்யவேண்டுமெனின் பட்டி தொட்டியெங்கும் மரங்களை நாட்ட வேண்டும்.

பல நாடுகளில் போக்குவரத்திற்கு சாதனங்கள் அதிகரித்துள்ளதால் அவை வெளியிடும் புகையால் சூழல் மிகவும் மோசமாகப் பாதிப்படைகின்றது. இப்படியான சூழற் பாதிப்புகளால் தான் புற்றுநோய் போன்ற கடுமையான நோய்கள் மனித குலத்தைத் தாக்குகின்றன. ஆகையால் புகையற்ற முறையில் வாகனங்களைச் செலுத்த ஆவன செய்தல் வேண்டும். இப்போது பல நாடுகளில் சாதி, மதம் போன்றவற்றால் போர்மூண்டுள்ளது. அதனால் அவர்கள் தங்களிடம் உள்ள ஆயுதங்களாலும் குண்டு வீச்சுவிமானங்களினாலும் குண்டுகளைப் பொழிகின்றனர். அதிலிருந்து வெளியேறும் இரசாயன வாயுக்கள் போன்றன சூழலைப் பாதிப்பது மட்டுமன்றி உயிரினங்களுக்கும் பாதிப்பை உண்டாக்கும். எனவே நாமும் அந்நாட்டு மக்களும் சேர்ந்து சாதி, மதம் போன்றவற்றால் போரை உருவாக்கியவர்களை சமாதானப்படுத்தி போரை நிறுத்தி, இரசாயன வாயுக்கள் சூழலைப் பாதிக்காத வண்ணம் பாதுகாக்க வேண்டும்.

இதைவிட இப்போது ஒவ்வொரு நாடும் போட்டிக்குப் போட்டியாக அணுகுண்டுப் பரிசோதனைகளை மேற்கொள்கின்றன. இதனால் அதனுள் இருந்து வெளியேறும் புகையுடன் கலந்து இரசாயன நச்சு வாயுக்கள் வெளிவருகின்றன. அப்போது சூழல் மாசடைவது மட்டுமன்றி மனிதன் கூட இறக்கும் நிலையேற்படும். இதைத் தடுக்க வழி என்னவென்றால் அணுஆயுதப் பரசோதனைகள் செய்வதை நாம் எல்லோரும் சேர்ந்து எதிர்த்து சூழலைப் பாதுகாக்க வேண்டும். ஆகவே மனிதன் கண்டுபிடிக்கும் ஒவ்வொரு செயற்பாடும் சூழலையும் இந்தப் பூமியையும் பாதிக்கும். எனவே நாம் சாதி, மதவேறுபாடின்றி ஒன்றுபட்டுச் சூழலைப்பாதுகாப்போம்.

மு.சிந்துஜா
தரம் : 9 B

# அன்றொரு நாள் நான் வயலோரத்தில் நடந்த பொழுது............

இயற்கையின் கொடைக்கு என்றுமே பஞ்சமில்லை இப்புவியிலே. ஆம்! வள்ளலாகிய அவர் வாரியிறைக்கும் அழகுகள் தான் எத்தனை எத்தனை! அவற்றுள்ளே சின்னவள் என் மனம் லயித்த ஓர் ரம்மியமான காட்சியினை சிறு பேதை எனது சிற்றறிவிற்கு எட்டியவண்ணம் விளம்புகின்றேன்.

அன்றொரு நாள்....... காலைக் கதிரவன் தன் பொற் கதிர்களைப் பரப்பியவண்ணம் பாரை மெல்ல எட்டிப் பார்க்கிறான். அவன் வரவு கண்ட வான மகள் வெட்கத்தால் சிவக்கிறாள். விண் மீன்கள் வீறாப்புடன் ஓய்வெடுக்கச் சென்றன. ஆதவன் வரவால் அச்சம் கொண்டு பனிமூட்டம் மெல்ல விலகுகின்றது. அந்த இதமான காலை வேளையிலே தான், நான் வயலோரம் நடை பயின்றேன்,

இவ்வளவு நேரமும் கதிர்களிலே துயில் கொண்டிருந்த பனித்துளிகளை பகலவன் வந்து தட்டியெழுப்புகின்றான். பயிர்கள் யாவும் காலை வெய்யிலிலே குளிர் காய்ந்தன. பச்சைப்பசேலென கம்பளம் பாரெங்கும் விரிந்திருப்பது போல் ஓர் உணர்ச்சி. ஆம் பசுமையான வயல்களை அவ்வாறு காட்சியளித்தன. அதிலே மஞ்சளாறு பாய்வது போல் நெற் கதிர்கள் குலங்கின. கம்பளத்திலே சில வர்ணப் பொட்டுக்கள் போல் கூலியாட்கள் வயலிடையே களை பிடுங்குகின்றனர். சில்லென்று வீசிய காலைத் தென்றலிலே பயிர்கள் தலையசைத்து நடனமாடின. உழவர்கள் உற்சாகமாக வயலை நோக்கி வந்து பொண்டிருந்தனர். அவர்கள் தமக்குரிய நிலங்களை உழுது பண்படுத்தும் முயற்சியில் இறங்கத் தொடங்கினார்கள்.

“ஏர் முனைக்கு நேர் இங்கே எதுவுமே இல்லை என்றும் நம்ம வாழ்விலே பஞ்சமேயில்லை.....” என்ற பாடல் அப்பொழுது என் சிந்தனையிலே தவழ்ந்தது.தொழிலாளிகள் உடலிலே முத்துக்கள் போல வியர்வைத் துளிகள் காட்சியளித்தன. அவர்கள் சிந்திய வியர்வைத் துளிகளின் பிரதிபலனாகவே நாமுண்ணும் அரிசிச் சோறு விளங்குகின்றது. நாள் முளுவதும் எவ்வளவு கஸ்ரப்பட்டு வெய்யிலிலே நின்று அயராது உழைத்து நமக்கு உணவளிக்கின்றான் விவசாயி.. அதனை நான் இன்றுதான் தெளிவாகப் புரிந்து கொண்டேன்.

மனிதன் கூட இவ்வாறு அடிபணிந்து வேலை புரிவானோ? இப்புவியிலே உழவனுக்குக் கட்டுப்பட்டு எருதுகளும் நாம்பன்களும் வயலிலே பணிபுரிகின்றன. உழைத்துக் களைத்த விவசாயிகளுக்கு நிழல் கொடுக்க வட்டக் குடை போல அங்கே வயலேரத்திலே ஓர் வேம்பு நின்றது. பகலவனின் சுட்டெரிக்கும் அனலில் நின்று நின்று மரத்து விட்டது உழவர் உடம்பு. வானமகள் நெற்றித் திலகதிதை நடுவே வைத்தது போல பகலவன் வானின் உச்சியிலே நிலை பெற்றிருந்த வேளை என் மேனியில் அவன் கதிர்கள் பாய்ந்தன. அப்போது தான் உணர்ந்தேன் காலையிலே வந்த நான் இன்னும் வீடு திரும்பவில்லையென்று.

ஆம் இயற்கையின் இன்பங்களை நுகரத் தொடங்கினால் சில வேளையில் நம்மை நாமே மறந்த விடுவதுண்டு. வயலோரம் நின்று நான் மனதார ரசித்த இவ்வயற் காட்சி என்மனதை விட்டு என்றுமே அகலாவண்ணம் நீங்காஇடம் பிடித்துவிட்டது. மருத நிலத்தின் பேரழகுதான் என்னே! வரப்புயர நீர் உயரும். நீர் உயர நெல் உயரும். நெல் உயரக் குடி உயரும். குடிஉயரக் கொன் உயர்வான். எனும் ஔவையின் சிந்தனை முத்துக்கள் அவ்வேளை என் நெஞ்சைத் தொட்டது. இதிலே எத்தனை உண்மைகள் தான் பொதிந்துள்ளது. இயற்கை அன்னை இப்புவிக்கு வரப்பிரசாதமாக அளித்த எழில்களை என்றுமே ரசித்து வாழ்வின் கயமைகள் ஒழித்து நாமோர் காவியம் பாடுவோம்.

மு.சிந்துஜா
தரம் 9 B

# கடற்கரையிலே ஒரு பொன்மாலைப் பொழுது

இது ஒரு கடல். கொஞ்சி விளையாடும் காலிமுகத்திடலில் சனநெருக்கடி மிகுந்த கொழும்பு மாநகரின் அது மாலை வேளைகளில் உல்லாசபுரியாயிருக்கும். ஒரு நாள் மாலை அந்த உல்லாசபுரிக்குச் செல்லவேண்டும் என்ற வேட்கை என்னுள் முளைத்தது. எனவே அங்கே சென்று கலங்கரை விளக்கின் அயலில் படுத்திருந்த கற்பாறையொன்றில் அமர்ந்தேன். மப்பு மந்தாரமற்ற பொன்மாலைப் பொழுது புன்முறுவல் சிந்தி மயங்கியது. இளந்தென்றல் சிறிய குழந்தையாய் மாறி மேனியெங்கும் அளைந்து மெய்மறக்கச் செய்தது. இன்பப் போதையில் மேற்கு வானையும் கடலையும் நோக்கினேன்.

எதிரே கரு நீலக்கடல் கண்ணுக்கெட்டிய தூரம் வரை பரந்து கிடக்கிறது. அறிவினுக்கு எல்லையும் காண முடியாதவாறு போல் இந்துமாகடல் காட்சியளித்தது. அந்தக் கடல் எல்லையில் கடலும் நீலவானமும் ஒன்றை ஒன்று தழுவிக் கொண்டு ஒன்றாய் விடுகின்றனவே. வானம் எது கடல் எது என்று வேறுபாடு காணமுடியாதவாறு தொடுவானம் பெரியவட்டத்தின் ஒரு வில்லாய் வளைந்து கிடக்கிறது. கடல் பெரியதொரு எழில் வீணையாய் கிடக்கிறது. வரிசை வரிசையாய் எழுந்து வரும் கடலலைகள் வீணையின் நரம்புகளாய்த் தோன்றின. மீட்டி இசை எழுப்புகிறான். கடல் வீணை பண்ணிசை பொழிவது போல இடைவிடாது ஆர்ப்பரிக்கிறது. நீல வானமும் கடலும் ஒன்னுடன்னொன்று கைகோர்த்து நிற்பதுபோல் காட்சியளிக்கின்றது. அக் காட்சியை ரசித்தபடி வீடுநோக்கி திரும்பினேன்.

வீ.யாழினி

தரம் 9B

CARLTON COLLEGE LIBRARY

# பழமொழிகளும் அவற்றின் கருத்துக்களும்

1. அறையில் ஆடியன்றோ அம்பலத்தில் ஆட வேண்டும்.

   தனிப்பயிற்சி

2. ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாயிரு.

   கருமத்தில் கண்ணாயிருத்தல்

3. உண்ணாச் சொத்து மண்ணாய்ப் போகும்

   உலோபித்தனம் கூடாது

4. எய்தவன் இருக்க அம்பை நோவதேன்.

   தப்பான அபிப்பிராயம்

5. நாம் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைக்கும்

   நினைப்பும் தவறும்

6. தன்னுயிர் போல மன்னுயிரை நினை

   உயிர்களிடத்தில் அன்பு காட்டுதல்

7. பெற்ற மனம் பித்து பிள்ளை மனம் கல்லு

   தாய்ப் பாசம்

8. துணை போனாலும் பிணை போகாதே

   துணைண நிற்பது பெருந்துன்பம்

9. சுண்டங்காய் கால் பணம் சுமை கூலி முக்கால் பணம்.

   கூடிய முயற்சி குறைந்த பயன்


10. துறவிக்கு வேந்தன் துரம்பு

    நீத்தார் பெருமை


11. பார்த்தால் பசு பாய்ந்தால் புலி

    வெளிவேடம்

ம.கஜவதனி.
தரம் 9B



ம. சிந்துஜா
தரம்-03
புட.ம



## உலகம் பற்றிய தகவல்கள்

| | |
|---|---|
| உலகின் மிகப் பெரிய கண்டம் | ஆசியாக்கண்டம் |
| உலகன் மிக நீளமான நதி | நைல்நதி |
| உலகில் மிகப் பெரிய பாலைவனம் | சகாரா |
| உலகிலே மிக உயர்ந்த மலைச் சிகரம் | எவரெஸ்ட் |
| உலகில் அதிக மக்கள் தொகை கொண்ட நாடு | சீனா |
| உலகில் குறைந்த மக்கள் தொகை கொண்ட நாடு | வத்திக்கான் நகரம் |
| உலகில் மிகச் சிறிய கண்டம் | அவுஸ்திரேலியா |

## இலங்கை பற்றிய தகவல்கள்

| | |
|---|---|
| இலங்கையின் தேசிய மலர் | நீலோற்பலம் |
| இலங்கையின் தேசிய மரம் | நாக மரம் |
| இலங்கையின் தேசிய விளையாட்டு | கரபந்தாட்டம் எல்லே |
| இலங்கையின் மிக நீளமான நதி | மகாவலி கங்கை |
| இலங்கையின் மிக உயரமான மலை | பீதுறுதாலகால மலை |
| இலங்கையின் மிகப் பெரிய தாவரவியற் பூங்கா | பேராதனைதாவரவியற் பூங்கா |
| இலங்கையின் இயற்கைத் துறைமுகம் | திருகோணமலை |
| இலங்கையின் அழகிய நீர் வீழ்ச்சிகள் | துன்கிந்த,தியலுமை |
| இலங்கையின் மிக உயர்ந்த நீர் வீழ்ச்சி | பம்பரகந்த நீர்வீழ்ச்சி |

தொகுப்பு: யோ.ஜஸ்மினா

தரம் : 9A

CARLTON COLLEGE
LIBRARY

# கண் பற்றிய இலக்கணத் தொடர்கள்

| | |
|---|---|
| கண்கலத்தல்: | ஒருவரையொருவர் பார்த்தல் அல்லது எதிர்ப்படுதல் |
| கண் களவு கொள்ளுதல்: | தான் பிறரைப் பார்ப்பதை அவன் காணதவாறு தான் அவனைப் பார்த்தல். |
| கண் கனலுதல்: | கோபத்தாற் கண் சிவத்தல் |
| கண் காட்டி விடல் | கண் சாடையால் ஏவிவிடுதல் |
| கண் கெடச் செய்தல்: | அறிந்து தீமை செய்தல் |
| கண் சுழலுதல்: | விழி சுழன்று மயங்குதல் |
| கண் காணுதல்: | கவனமாய்ப் பார்த்தல் |
| கண்ணழித்தல் | பதவுரை கூறல் |
| கண் சாய்தல்: | அறிவு தளர்தல் |
| கண்ணாயிருத்தல்: | விழிப்பாயிருத்தல்/அருமையாயிருத்தல் |

# பழமொழிகள்.

அகத்தின் அழகு முகத்தில் தெரியும்
அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு
மின்னுவதெல்லாம் பொன்னல்ல
எட்டாக் கனிக்குக் கொட்டாவி விடாதே
காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு
குப்பையிலே போட்டாலும் குண்டுமணி மங்காது
ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு
பழகப் பழகப் பாலும் புளிக்கும்
தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்
அடியாத மாடு படியாது
ஆனைக்கும் அடி சறுக்கும்
கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாசனை
ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?
ஈட்டி எட்டின மட்டும் பாயுமம்,பணம் பாதாளம் வரை பாயும்
இளமையிற் கல்வி சிலையில் எழுத்து
இக்கரை மாட்டுக்கு அக்கரைப் பச்சை
எறும்பூரக் கற்குழியும்
கரைப்பவர் கரைத்தால் கல்லும் கரையும்
உயர உயரப் பறந்தாலும்,ஊர்க்குருவி பருந்தாகுமா?
சூடு கண்ட பூனை அடுப்பங்கரை நாடாது.

மு.புவித்ரா
தரம் 9A

# விடுகதைகள்

அரைக்கால் தண்ணீருக்குள் ஆடு நீச்சல் போடுது அது என்ன?

தவளை

அப்பா பணத்தை எண்ண முடியாது. அம்மா புடவை மடிக்க முடியாது அது என்ன?

நட்சத்திரம் வானம்

உருவத்தில் சிறியவன் உழைப்பில் பெரியவன் அவன் யார்?

எறும்பு

ஓடும் குதிரைக்கு வால் குறைகிறது அது என்ன?

ஊசி-நூல்

ஒருபக்கப் பல்லால் ஒன்றை ஒன்பதாக்கும் அது என்ன?

ரம்பம்

வாலில்லாப் பறவை ஊர் ஊராய் பறக்கிறது அது என்ன?

விமானம்

வளைக்க முடியும் ஒடிக்க முடியாது அது என்ன?

தலைமயிர்

நீலமேகம் கொண்டவன் சுற்றி அலைகிறான் அவன் யார்?

கடல்

பூமியின் வளராத மரம். கிளை உண்டு. இலை இல்லை அது என்ன?

காளான்

**தெ.புருசோத்தமன்.**

**தரம் 9B**



[illegible]
ஆண்டு - 9B
y.c.h



# ஒலிம்பிக் சம்பந்தமான துணுக்குகள்

- கி.மு. 776ல் கிரேக்க மக்களின் இறைசடங்காக கடைப்பிடிக்கப்பட்ட விளையாட்டு ஒலிம்பிக் ஆகும்.
- கி.பி 1896 ல் நவீன ஒலிம்பிக் எதன்ஸ் நகரில் கெபர்டின் பிரபு மூலம் விளையாடப்பட்டது
- 1920ல் ஆண்ட்ரொப் ஒலிம்பிக்கில் தான் வீரவீராங்கனைகள் உறுதிமொழி எடுக்கும் வழக்கம் வந்தது.
- 1936ல் பெர்லின் ஒலிம்பிக்கில்தான் ஒலிம்பிக்ஜோதி ஏற்றும் வழக்கம் மீண்டும் வந்தது
- 1908ம் ஆண்டில்தான் ஒலிம்பிக் போட்டியில் கொக்கி சேர்க்கப்பட்டது
- 1968ம் ஆண்டு மெக்சிக்கோ ஒலிம்பிக்கில்தான் கிண்ணங்கள் அறிமுகமாயின.
- 1928ம் ஆண்டு ஆம்ஸ்டெர்டாம் ஒலிம்பிக்கில் தான் பெண்கள் பங்கேற்றனர்
- 1932ல் லாஸ்ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக்கில் தான் போட்டோபிலிஸ் மூலம் வெற்றி தீர்மானிக்கப்பட்டது.
- 1912ல் ஸ்டாகா ஹோட் ஒலிம்பிக்கில் தான் எலக்லானிக் கடிகாரம் அறிமுகமானது
- 1972ல் முனிஸ்நகரில் நடந்த ஒலிம்பிக் பெரும்பாலும் மழையில் நடந்தது
- 1960ல் ரோம் ஒலிம்பிக்கை மட்டும் போப்பாண்டவர் பார்த்து ரசித்தார்.
- 1948ல் லண்டன் ஒலிம்பிக்கில் தான் கம்யூனிஸ்ட் நாடுகள் கலந்து கொண்டன
- 1980ம் ஆண்டு மெக்சிக்கோ ஒலிம்பிக்கை அமெரிக்கா புறக்கணித்தது
- 1984ம் ஆண்டு லாஸ்ஏஞ்சலிஸ் ஒலிம்பிக்கை ரஸ்யா புறக்கணித்தது.
- 1960ம் ஆண்டு ரோம் ஒலிம்பிக்கில் சைக்கிள் வீரர்

# காற்று

வடக்கே இருந்து வருவது
வாடைக் காற்று ஆகும்
தெற்கே இருந்து வருவது
தென்றல் காற்று ஆகும்

நேற்று வளர்ந்த செடிகளும்
நீண்ட பெரிய மரங்களும்
காற்று இன்றி வளராது
காட்டுப் பூவும் மலராது

மனிதன் உயிரும் காற்றினால்
மாறாமலே உலவாது
இனிமை காற்று இல்லையேல்
இந்த உயிரும் போகுது

காற்று மண்டலம் இல்லையேல்
கவர்ச்சி மேகம் தெரியாது
காற்று இன்றி உலகமும்
கச்சிதமாகச் சுழலாது

ஆலை,மோட்டார் ரயிலும்
அவைகள் விடும் புகையும்
காலை மாலை இரவில்
காற்றை அசுத்தம் செய்யும்

உற்று நன்றாய் உணர்ந்து
உயர்ந்த பூங்கா அமைப்போம்
சுற்றுச் சூழல் கெடாமல்
சூழ்ந்து காற்றைக் காப்போம்

**தெ.புருசோத்தமன்.**
**தரம் 9B**

# சுனாமி வந்ததனால்

2004ம் ஆண்டு டிசம்பர் மாதம்
26ம் தேதி வந்த ஓர் ஆழிப் பேரலை
பறித்ததே நம் வாழ்வினை
சிதைத்ததே நம் உயிரினை

பௌர்ணமி நிலவு வீசும்
நாளன்று வந்ததே ஆழிப்பேரலை
சுனாமி என்று இப்பெயர் கொண்டு
வந்தது அந்த சுனாமி என்ற பினாமி

ஏழையின் பக்கமே பார்க்காத
செல்வனும் ஒரே முகாமில்
வாழ்வு வாழ்வு எதனால் வந்தது
சுனாமி எனும் பேரலையால்

ஒருநிமிடத்தில் வந்து தரைமட்டம்
ஆகியது நம் நிலம்
மீண்டும் அமைதியானது நம் நீலக்கடல்

மீண்டும் படர்ந்தன கடலில்
படகுகள், வலைகள் வந்து
மக்கள் தம் வீடு நோக்கி
கழித்தனர் தம் வாழ்வை

**நிசுகிர்தா**
**தரம் 9ஏ**

# அழிந்துவரும் மனிதநேயம்

என் அன்புச் சகோதரா
என் அருமைமிகு சகோதரி
இந்த யுத்தத்தால் ஏற்பட்ட
இதய காயங்கள்
இதை எங்கே நாங்கள்
கொண்டு புதைப்பது
இரக்கமற்ற அரக்கர் குலம்
மனிதநேயத்தையே
மண் தோண்டி புதைத்து விட்டார்கள்
சாதி, சனம் என்ன
பாசஉறவு என்ன
துப்பாக்கியைத் தூக்கி
அப்பாவி மக்களை
சுட்டுக் கொல்கிறார்கள்
அவனும் வாறான் இவனும் வாறான்
எமகண்டர்கள்
வீட்டுக்கள் வந்து புகுந்து
இளைஞர் யுவதியைக் கடத்திச் சென்று
அட நல்லூர் முருகா
உனக்குத்தான் வெளிச்சம்
நாயைவிடக் கேவலண்டா
கூட்டிப் போனவங்க சந்தியில
நாயைவிடக் கேவலமாய் சுட்டு
போட்டால் தந்தைக்கு பிள்ளை
இல்லை பிள்ளைக்கு தந்தை இல்லை
கழுத்தறுத்த யுத்தம்
பாழாய்ப் போனதுகள் அடித்த குண்டில்
இறந்துவிட்டான்
பசியில் பாலகன் இறந்த தாயின்
முகத்தைப் பார்த்து இரக்கமற்ற
அரக்கர் குலங்கள்
மனிதனாக மாறுங்கள்
யுத்தம் இரத்தம்
இப்படித்தான் ஏற்படுத்தியது
இந்தச் சமுதாயத் தாக்கம்

**சோ தஜந்தினி**
**தரம் 9ஏ**

... TON CO...
LIBRARY
...


# விடுகதைகள்

1. கடுகு மடிக்க இலை இல்லை, யானை படுக்க நிழல் உண்டு அது என்ன?
   சவுக்குமரம்
2. ஊசிபோல இருப்பான் ஊரையே எரிப்பான். அவன் யார்?
   தீக்குச்சி
3. தரையில் எறிந்தால் உயர எழுவான் உயரஎறிந்தால் தரையில் விழுவான் அவன் யார்?
   பந்து
4. அண்ணன் தம்பி இரண்டு பேர் அவரைச்சுற்றி பன்னிரண்டுபேர் அவன் யார்?
   மணிக்கூடு
5. ஐந்துவீட்டுக்கு ஒரு முற்றம் அது என்ன?
   உள்ளங்கை
6. தொப்பென்று விழுவான் தொப்பி கழல்வான் அவன் யார்?
   பனம்பழம்
7. உள்ளே இருந்தால் ஓடித்திரிவான் வெளியேவந்தால் விரைவில் மடிவான் அவன் யார்?
   மீன்

S.பிருந்தா
தரம் 9 A

1. காடு மேடெல்லாம் சுற்றிவந்தாலும் இருட்டு நேரத்தில் மட்டும் காணாமல் போவான் அவன் யார்?
   சூரியன்
2. இங்கும் அங்குமாய் ஆடிக் கொண்டே காலம் காட்டுவான் அவன் யார்?
   கடிகாரபெண்டுலம்
3. துள்ளிக் குதித்து மரம் ஏறும் முத்தருக்கு முதுகிலே மூன்று கோடு அவன் யார்?
   அணில்
4. நெருப்பைத் தொட்டால் துள்ளிக் குதித்து ஓலமிடுவான் அவன் யார்?
   பட்டாசு
5. அரைச்சாண் வெள்ளையனுக்கு கால்சாண் தொப்பி அவன் யார்?
   தீக்குச்சி
6. சட்டைபோடாத ஜாலக்காரன் போடாத சட்டையை கழற்றும் மாயக்காரன் அவன் யார்?
   பாம்பு
7. மரக்கிளையை தலையில் சுமந்தபடி மரணபயத்துடன் ஓடிக் கொண்டிருப்பான் அவன் யார்?
   மான்
8. சொல்லின்றி செயலின்றி அழவைப்பாள் அவன் யார்?
   வெங்காயம்
9. தண்ணீரில் குதித்தாடியவன் வீட்டுச் சமையலில் கொதிக்கின்றான் அவன் யார்?
   மீன்
10. ஆழக்கடலில் தேடிக்கிடைத்த அழகுப்புதையல் அவன் யார்?
    முத்து

செ.ததீஸ்குமார்
தரம் 9 A



# சிந்தனைத் துளிகள்

உண்மை சொல்லி

கெட்டாருமில்லை

பொய்சொல்லி

வாழ்ந்தாருமில்லை

உடலுக்கு உறுதுணை தூய்மை

உயிருக்கு உறுதுணை வாய்மை

எங்கு பிறப்பு இருக்கின்றதோ அங்கு

அழிவும் மரணமும் உண்டு

கேட்பதையெல்லாம் நம்பாதே

நம்பியதையெல்லாம் சொல்லாதே

எந்த ஏற்றத்துக்கும் ஓர்

இறக்கம் உண்டு எந்தத்

துன்பத்திற்கும் ஓர் இறுதி

உண்டு எந்த முயற்சிக்கும் ஒரு

பலன் உண்டு

ச.சுபாசினி

தரம் 9பி

# பொதுஅறிவு

1. ஒளியின் திறனை அளக்கும் கருவி :- ஒயாமானி
2. விமானம் பறக்கும் போது உயரத்தை அளப்பது:- அல்டிமானி
3. இதயம் வேலை செய்வதைக் காட்டும் கருவி:- காடியோகிராம்
4. உலகில் சனத்தொகை கூடிய நகரம்:- டோக்கியோ
5. கூடிய நாடுகளைக் கொண்ட கண்டம்:- ஆபிரிக்கா
6. தமிழ்மொழி அகராதியைத் தொகுத்தவர்:- திருவாளர்.கு. கதிரவேற்பிள்ளை
7. இலங்கையில் தயாரிக்கப்பட்ட முல் தமிழ்த் திரைப்படம்:- குத்துவிளக்கு
8. கூடியளவு சீனியை உற்பத்தி செய்யும் நாடு:- கியூபா
9. காற்றின் வேகம், திசை என்பவற்றை அளக்கும் கருவி:- அனமோமானி
10. தமிழ் நாடகத்துறையின் தந்தை:- பம்மல் சம்மந்த முதலியார்
11. ஏரிகள் அதிகம் கொண்ட நாடு:- பின்லாந்து
12. 2012ல் உலகக்கிண்ண காற்பந்துப் போட்டிகள் இடம்பெறும் நாடு:- உக்ரைன்
13. உலகிலே சிறிய நாடு:- வத்திக்கான்
14. வெப்பத்தின் வலிமையை, அளவை அளப்பது:- கலோரிமானி
15. விண்வெளிக்குச் சென்ற இந்தியப்பெண்மணி:- கல்பனா சாவ்லா
16. உலகத்தில் கூடியளவு சனத்தொகை கொண்ட நாடு:- சீனா
17. இலங்கையிலுள்ள மொத்தப் பாடசாலைகளின் எண்ணிக்கை:- 10200
18. இலங்கையில் இலவசக் கல்வியை அறிமுகப்படுத்தியவர்:- C.W.W. கன்னங்கரா
19. இலங்கையின் முதல் பிரதம மந்திரி:- D.S சேனநாயக்க

**A.சிவச்சந்திரன்**
**தரம் 9பி**

# விடுகதைகள்

1. ஒரு துரைக்கு இரண்டு தொப்பி அவன் யார்?
2. நதிகள் ஐந்து பாலம் ஒன்று அதுஎன்ன?
3. ஓடும் குதிரைக்கு வால் குறைகிறது அது என்ன?
4. ஓடுவான் ஆடுவான் அத்தனையும் ஒற்றைக் காலில் அவன் யார்?
5. ஓடியாடி சம்பாதித்து ஒரேநாளில் பறிகொடுப்பார்கள் அவர்கள் யார்?
6. கண்உண்டு பார்வை இல்லை அவன் யார்?
7. காற்றிலே வளர்வான் தண்ணீரில் அழிவான் அவன் யார்?
8. சிவந்தவாயன் சிறிதுபேசினாலும் மகிழ்ச்சியோமகிழ்ச்சி அவன் யார்?
9. துளித்துளியாய் கண்ணீர் விட்டு இருளைத்இ தூரமாய் விரட்டுவான் அவன் யார்?
10. நீலநிற மேடையில் கோடிமலர் காயுது அது என்ன?

## விடைகள்

1. பட்டாணி
2. உள்ளங்கை
3. ஊசி, நூல்
4. பம்பரம்
5. தேன்-தேனீக்கள்
6. தேங்காய்
7. நெருப்பு
8. கிளி
9. மெழுவர்த்தி
10. வானில் நட்சத்திரங்கள்

**ச.கிருஷ்ணபவா**
தரம் 9ஏ

# அதிசய உண்மைகள்

1. உலகிலே அதிகம் கடத்தற் தொழிலில் ஈடுபடுவது நைஜீரிய நாட்டுப் பெண்கள் ஆகும்.
2. அமெரிக்காவைச் சேர்ந்த அன்னி ஜோன்ஸ் எலியட் என்ற பெண் குழந்தைக்கு இரண்டு வயதில் மீசை, தாடி முளைக்கத் தொடங்கி விட்டது.
3. திமிங்கிலத்தின் வாயில் நரம்புகள் இல்லை
4. உலகிலேயே அதிக ஆழம் உள்ள ஏரி சைபீரியாவில் உள்ள பைசல் ஏரியாகும்.
5. இடம்விட்டு நகரக்கூடிய தாவரம் கிளைமுடோ மோனஜ் ஆகும்
6. நோபிள் சமாதானப்பரிசை உருவாக்கிய நாடு சுவீடன்.
7. குரங்குகள் மற்றைய பிராணிகளைவிட அதிகமாக மூளை வளர்ச்சி பெற்றவை
8. முதன்முதலில் காகிதத்தை உருவாக்கியவர் சீனாவைச் சேர்ந்த சாய்லூன்
9. ஜப்பான் பெண்கள் 25 வயதிற்கு மேல் தான் திருமணம் செய்து கொள்கிறார்கள்
10. டில்லியில் ஆட்சி செய்த முதல் பெண்மணி ரஷ்யா சுல்தானா என்பவர்

# மனித தர்மம்

- ஏழ்மையிலும் நேர்மை
- கோபத்திலும் பொறுமை
- தோல்வியிலும் விடாமுயற்சி
- தரித்திரத்திலும் பரோபாகாரம்
- துன்பத்திலும் தைரியம்
- செல்வத்திலும் எளிமை
- பதவியிலும் பண்பு

**சி.மயூரன்**
**தரம்** 9ஏ

# இலங்கையின் வரலாறு

- 1505 - போர்த்துக்கேயர் வருகை
- 1658 - ஒலலாந்தர் வருகை
- 1796 - ஆங்கிலேயர் வருகை
- 1802 - முடிக்குரிய குடியேற்ற நாடாகியமை
- 1815 - கண்டி யுத்தம் (கண்டியின் இறுதி மன்னன் ஸ்ரீவிகிகரமராஜசிங்கன்
- 1833 - கோல்புறூக் யாப்பு உருவாகியமை
- 1844 - பொலிஸ் சேவை ஆரம்பம்
- 1871 - முதல் குடிசன கணக்கெடுப்பு ஆரம்பம்
- 1925 - வானொலிசேவை ஆரம்பிக்கப்பட்டது (1949ல் இலங்கை வானொலி எனவும் 1967ல் இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம் எனவும் அழைக்கப்பட்டது.
- 1939 - இலங்கை வங்கி ஆரம்பம்.
- 1940 - சோல்பரி அரசியல் யாப்பு உருவாக்கம்
- 1947 - இலங்கையின் முதலாவது மௌன திரைப்படம் (இராஜகீய விக்கிரமய)
- 1948 - சுதந்திரம் கிடைத்தமை (04-02-1948)
- 1949 - இராணுவம் உருவாக்கப்பட்டது.
- 1950 - கடற்படை உருவாக்கப்பட்டது
  வாளேந்திய சிங்கக்கொடி தேசியக் கொடியாக அங்கீகரிக்கப்பட்டது
  இலங்கை மத்தியவங்கி உருவாக்கப்பட்டது
- 1955 - இலங்கை ஐ.நா சபையில் அங்கத்துவம் பெறல்
- 1956 - தனிச் சிங்களத் சட்டம் கொண்டுவரப்பட்டது
- 1961 - மக்கள் வங்கி உருவானது
- 1972 - தேசிய அடையாள அட்டை
- 1978 - தொலைக்காட்சி சேவை ஆரம்பம் 1987ல் ரூபவாகினிக் கூட்டுத்தாபனம்)
- 1979 - பயங்கரவாத தடைச் சட்டம்
- 1987 - இலங்கை இந்திய ஒப்பந்தம்
- 1996 - இலங்கை கிரிக்கெட் அணி உலகக் கிண்ணத்தை வென்றது
- 1998 - பொருட்கள் சேவைகள் வரி (G.S.T) அறிமுகம்

தொகுப்பு : சி.மயுரன்

தரம் : 9 A


த.சத்தியராஜ்.
9சீ



# Peacock

The peacock, a handsome bird, comes from India and Srilanks. It is richly coloured and is elegant in appearance. Its feathers shins with green and purple in the sun. The feathers that cover the baseof the quills in the bird grow long. The bird's piercing cry sounds raher like an angry act.

In olden days many peacocks were taken to Europe and America. There they were let loose in parks and gardens for decorative effect. The peacock was introduced into Greece and Rome by Alexander the Great after his invasion of India.

In ancint India people living in many parts worshipped the peacocks in many ways. Even today some tribes in Central and Northen India worship the bird. In Tamil Nadu [South India] the tamils hold it in highesteem because it is the mount of lord Subramaniya popularly known as Muruga. In temples in Eastern India priests carry a peacock fan in order to plead for giveness for the sins committed by the devotes. The peacock feathuer is sacred to the Hindus as it is associated with Lord Krishna in Hindumythology.

The beautiful peacocks are in now the National Bird India. The bird has a distinct and noteworthy place in the legends, literature, folkloxes and love songs of the country.

**R.Rangithamalar**

Year 9B

# Rainy season

Every body loves the rainy season. Students plays with paper boat famers are happy to grow their crops. Dhoby is happy because there is nough water we hear frogs croak in the rain season.

We see farmers busy in their fields they plough the ploughs. One bullock draws the ploughs. One lady busy helping in the farm children also help their parents in the farm

Our ponds are full of water boys and girls learn swimming in the ponds. Farmers remain at home and repair their farm implements. Oney weed their fields and feed their cattle oney prepare good food of their produee the rany.Season is a blessing to every body.

**T.Usha**

Year 9B

# The Computer Revoloution

In the past 10years the world has witnessed a computer revoloution. There is now hardly any aspect of every day life that does not bring us into contact with computers. Whether it is usig in shoping at the super market or using them at work. School or playground computer has become a vital toolfor government, the armed forces, banks, business and industries.

The first electronic computer built over fifty years ago took up the spce of a large basemant room. Today the essence of a computer of equal calculating power can be built into a small silver of the material. Silicon is smaller than a postage stamp. Such micromini qutreization of electronic. Circuits have led to asmall chap, power full and reliable, computers for the home and office. Thecomputers great advantage over human beings is its ability to store vat amounts of information and the incredible speed at which it can work in the time that it takes toneed this page a computer can perform millon of operations this makes it idal for repeating detailed work, such as keeping company accounts anlysing statisties and monitoring producton in factories. But although they work at such speedit is important to remember that computers are not intelligent. Computers are no more intelligent than the metal and plastic of which they are made.

**N.Thamiliny**
Year 9B

# The Tsunami

On 26th in December 2004 at 9.30am the people of the coastal areas in the Asian countries had heard a terrible sound of the waves. They were frightended and could not know what to do because it was the first time they were experiencing tsunami with in minitues they could seethe waves of tsunami chasing them. Atonce they carried their bases, elderly people and their belongings to the flats, temles, forests and other places for their survival. Some had said that they had climbed up the trees, walls etc. But the tsunami had done a terrible disaster to the people in the coastal areas in the Asian countries such as India, Srilanka, Indonesia, Malaysia and Malaidives. The tsunami carried awy cars, rans, fishinboats and roof of the houses.

The coastal areas were flooded. All the houses, buildings, railway tracks were badly damaged by the floods. The water supplies and electricity were cutoff. The wells were filled with sea water. The railway lines and roads were covered in mud. Most of people were badly injured.

The social severs dept by the UNHCR, UNICEF and all the foreigen organizations had emotionally stepped down to help the victims of tsunami for their survival. It is a pathetic and horrible situation. It is a natural disaster caused by the anger of God.

**M.Sinthuja**

Year 9B

# பொதறிவு வினா விடை

1. முக்கனிகள் எவை?
   மாம்பழம், பலாப்பழம் வாழைப்பழம்
2. சிறுவவர்களுக்குக் காணப்படும் பாற்பற்கள் எத்தனை?
   20
3. 3 மனித வலுவவினால் இயங்கும் போக்குவரத்துச் சாதனம் எது?
   துவிச்சக்கர வண்டி
4. 4. இலங்கைக்கு வடக்காக அண்மையிலுள்ள நாடு?
   இந்தியா
5. தூய நீரின் சுவை யாது?
   சுவையில்லை
6. இலங்கையில் வாழும் மக்களில் எந்த சமயத்தைப் பின்பற்றுபவர்கள் அதிகம்?
   பௌத்த சமயம்
7. இலங்கையில் சீனித் தொழிற்சாலைகள் அமைந்துள்ள இடங்கள் எவை?
   கந்தளாய்,ஹிங்குராணை,பெலவத்தை
8. பூரண நிலவுடைய நாளை எவ்வாறு அழைப்பர்?
   பௌர்ணமி
9. சந்திரன் மறையும் நாளை எவ்வாறு அழைப்பர்?
   அமாவாசை
10. இயற்கை ஒளி முதல் எது?
    சூரியன்
11. இலங்கையில் மிக நீண்ட ஆறு எது?
    மகாவலி கங்கை
12. முஸ்லீங்களின் வேத நூல் எது?
    திருக்குர்ஆன்
13. தொலைபேசியைக் கண்டுபிடித்தவர் யார்?
    அலெக்சாந்தர் கிரகம்பெல்
14. பின்வரும் ஆண்டுகளின் முடிவில் எடுக்கப்படும் விழா எவ்வாறு அழைக்கப்படும்?
    25 – வெள்ளி விழா    50 – பொன் விழா    60 – வைரவிழாமணிவிழா
    75 – முத்து பவளவிழா    80 – அமுதவிழா    100 – நூற்றாண்டுவிழா
15. இலங்கையின் தேசிய விளையாட்டு எது?
    கரபந்தாட்டம்    எல்லே
16. ஆரோக்கியமான மனிதளின் இதயத் துடிப்பு நிமிடத்திற்கு எத்தனை?
    72 முறை
17. இலங்கையில் எத்தனை மாவட'டங்கள் உள்ளன?
    25
18. இலங்கையின் பெரிய மாவட்டம் எது?
    அனுராதபுரம்
19. இலங்கையில் நிலப் பரப்பில் சிறிய மாவட்டம் எது?
    கொழும்பு
20. இலங்கையில் மிக உயரமான மலை எது?
    பேதுறுதாலகால மலை
21. நரம்புக் கருவவிகள் எவை?
    மிருதஙங்கம்,வயலின்,வீணை,யாழ்

22. வெப்பமானியில் பயன்படுத்தும் திரவ உலோகம் எது?
இரசம்

23. ஞாயிற்றுத் தொகுதியில் எத்தனை கோள்கள் உண்டு?
ஒன்பது

24. இலங்கையின் இயற்கைத் துறைமுகம் எது?
திருகோணமலை

25. கணவனை இழந்தவள் யார்?
விதவை

26. மனைவியை இழந்தவன் யார்?
தபுதாரன்

27. இலங்கையின் தலைநகரம் எது?
ஸ்ரீ ஜெயவர்த்தனபுர

28. புவியின் துணைக் கிரகம் யாது?
சந்திரன்

29. மருந்தாகப் பயன்படுத்தப்படும் தாவரங்கள் எவை?
துளசி, கற்பூரவள்ளி,தூதுவளை

30. வளர்ந்த மனிதனுக்கு மொத்தம் எத்தனை பற்கள்?
32

31. வட்டமான பாதை கொண்ட கிரகம் எது?
வெள்ளி

32. உலகிலேயே மிகப் பெரிய வளைகுடா எது?
மெக்சிக்கோ வளைகுடா

33. மிக நீண்ட ஆயுளைக் கொண்ட விலங்கு எது?
ஆமை

34. மிக விரைவில் இனப்பெருக்கம் செய்யும் பாலூட்டி எது?
சுண்டெலி

35. புலிகள் அதிகமாகக் காணப்படும் கண்டம் எது?
ஆசியா

36. வெட்டுக்கிளியை வேட்டையாடும் பறவை எது?
மைனா

37. மனித உடலில் எத்தனை தசைகள் காணப்படுகின்றன?
639.

38. மூளையில் உள்ள நியூரான்களின் எண்ணிக்கை யாது?
1400

39. நிமோனியா நோய் உடலின் எந்த உறுப்பைப் பாதிக்கின்றது?
நுரையீரல்

40. விண்வெளியில் வைரம் தயாரித்த முதல் நாடு எது?
ஜப்பான்

மு.சிந்துஜா.
தரம் : 9B

# விடுகதைகள்

1. உழைப்பிலே பெரியவன் உருவத்தில் சிறியவன் அவன் யார்?
   எறும்பு
2. உரித்துவிட்ட குருவி ஊருக்குள் போகிறது அது என்ன?
   புளி
3. உச்சியில் கிரீடம் வைத்தவனுக்கு உடம்பெல்லாம் கண் அவன் யார்?
   அன்னாசிப்பழம்
4. உப்பபைத்தின்றவன் உறங்காமல் அலைகிறான் அவன் யார்?
   கடல்
5. எடுக்க எடுக்க வளரும் எண்ணெய் கண்டால் படியும் அது என்ன?
   தலைமுடி
6. ஊர்ஊராய் சுற்றினாலும் உரியஇடத்துக்கு வந்துவிடுவான்.அவன் யார்?
   தபால்
7. எத்தனை வேகமாய் சுற்றினாலும் தலைசுற்றாது இவனுக்கு அவன் யார்?
   மின்விசிறி
8. ஊசி நுழையாத காட்டிலும் ஒருவன் நுழைந்து விடுவான் அவன் யார்?
   புகை
9. அந்தரத்தில் தொங்குது அரக்கனின் தலை அது என்ன?
   திருஷ்டிப்பூசணி
10. அரைஅடிப்புல்லில் ஏறுவான் இறங்குவான் அவன் யார்?
    பேன்

சி.சிந்துஜா

தரம் 9பி

# வானியலாளர்களும் கண்டுபிடிப்புக்களும்

| வானியலாளர் | கண்டுபிடிப்புக்கள் |
|---|---|
| இரரோஸ் தின்ஸ | புவிப் பரிதியன் அளவை அண்ணளவாகக் குறிப்பிட்டார் |
| ஹிப்பார்கஸ் | பிரகாசத்தின் அடிப்படையில் உடுக்களை வகைப்படுத்தினார். உடுக்களின் பெயர்ப் பட்டியல் தயாரிக்கப் பெரும் பங்களிப்புச் செய்தார். |
| குளோடியஸ் தொலமி | புவியின் அகிலக் கொள்கையை வெளியிட்டார் |
| நிக்கலஸ் கொப்பனிக்கஸ் | புவி உட்பட அனைத்துக் கோள்களும் சூரியனைச் சுற்றி வலம் வருகின்றன என கண்டுபிடித்தார். |
| கலிலியோகலிலி | தொலைக் காட்டியை முதன்முதல் கண்டுபிடித்தார். |
| ஐசக் நியூட்டன் | ஈர்ப்புவிசையியக்கம். முதன்மை நிறங்களுக்கும் சூரிய ஒளிக்கும் இடையிலான தொடர்பு பற்றி விளக்கினார். |
| ஜொஹன்னஸ் கெப்லர் | கோள்களின் இயக்கம் தொடர்பான விதிகளை வெளியிட்டார். |
| எட்மன் ஹோலி | வால் வெள்ளி தொடர்பாக ஆராய்ந்தார். |


**த.வித்தியாதரன்.**
**தரம்: 9ஏ.**